ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுங்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கஉ	மெய்கண்டான் யாண்டு-எகக வைகாசித்திங்கள் 1934ஆு ஜூன்மீ—ஜூலைமீ	பரல் கக

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்.

மெய்யராகிப் பொய்மைநீக்கி வேதனையைத் துறந்து
செய்யரானார் சிந்தையானே தேவர்குலக் கொழுந்தே
நைவனாயே னுன்றனுமை நாளுநவிற்று கின்றேன்
வையமுன்னே வந்துநல்காய் வலிவலமே யவனே.

பதவுரை:—

வலிவலம் மேயவனே—திருவலிவலம் என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டருளி யிருக்கிறவனே

பொய்மைநீக்கி—நிலையில்லா திருக்கின்ற உலக நுகர்வு வாழ்வைப் பற்றிக் கொண்டிருக்கும் வஞ்சப்புலன் செயலை விலக்கி

மெய்யர் ஆகி—நிலையுள்ளதாகிய சிவபோகத்தையே விரும்பும் உண்மை வாழ்வினை உடையவராகி

வேதனையைத் துறந்து—உலகவாழ்வு நுகர்விலுளதாகிய இன்ப துன்ப உணர்ச்சியையும் விட்டு நீங்கி

செய்யர் ஆனார் சிந்தையானே—(இவ்வாறு பொய்மை நீக்கி மெய்ய ராகி வேதனையைத் துறந்ததனு லுண்டாகும் பயனாக பசுகர ணம் நீங்கி மலமூன்றுஞ் செற்றுச் சிவகரணமாகிய மாந்த ருடைய) செம்மை யுள்ளத்தில் சிவமாய் விளங்குகின்றவனே

தேவர் குலக்கொழுந்தே—மாந்தர்களுக்கு அருள்செய்யும் தலைவனு யிருத்தலன்றி தேவர் கூட்டத்திற்கும் அருள் செய்யுந் தலைவனு யிருக்கிறவனே

உன்றன் நாமம்—நினது பெயராயுள்ள அஞ்செழுத்தை

நாயேன்—நீ எனக்கு இடைவிடாது செய்து வருகின்ற உதவியை நாய்போல நன்றிமறவா திருக்கின்ற நான்

நைவேன்—அதன் உட்பொருளை நினைந்து அகங் குழைந்து உருகு கின்றவனுய்

நாளும்—ஒவ்வொரு நாளும்

நவிற்றுகின்றேன்—ஓதி வருகின்றேன்

வைய முன்னேவந்து—ஆதலினுல் நீ உலகில் எனக்கு முன்னே குரு வடிவில் வந்து

நல்காய்—பேரின்பம் தந்து அருள் செய்யும்படி வேண்டுகிறேன்.

விளக்கவுரை:—

பொய்மை நீக்கி—இங்கே பொய்மை என்பது வஞ்சனை (Unreality) அதாவது உலக நுகர்வு வாழ்வைப் பற்றிக் கொண்டிருக்கும் வஞ்சப் புலன்செயல். இதில் உள்ளமானது காற்றூடி போல நிலையின்றிச் சுழன்று உழன்று கொண்டிருக்கும். நீக்குதல் எதிர்மறை வினை (Negative action).

மெய்யர் ஆகி—மெய் என்பது என்றும் உள்ள நிலையான இயற்கைத் தன்மை. (Reality). இந்நிலையான தன்மையானது உள்ளம் உலகத்தைப் பற்றுதலை விட்டு இறைவனைப் பற்றுதலா லுண்டா கிறது. மெய்யினை உடையராகி என்னுது மெய்யர் ஆகி என்பத ஞல், உயிருக்கு மெய்யாகிய இறைவனை அடைதலே இயல்பு என்பதும், மல மறைப்பினுல் உயிர் இறைவனைப் பற்ருது பொய் ஆகிய உலகினைப் பற்றி யிருத்தல் செயற்கை என்பதும் குறிப்பிடப்பட்டன. ஆகி என்னும் ஆக்க வினை மல மறைப்பி னின்றும் நீங்கித் தூய்மை ஆதலைக்குறிக்கிறது. மேலே விட் டத்திலே கயிற்றினுற் கட்டப்பட்டிருக்கும் ஒரு ஊஞ்சற் பலகைமேல் இருக்கிறவன், கயிறு அறுதலும் தரையைச் சேர் தல் போல, ஒருவன் உலகப்பற்றை விடுதலும் இறைவனைச் சார்தல் ஒருதலை யாதலின், பொய்மை நீக்கி என்று கூறியபின் மெய்யர் ஆகி என்ருர். ஆகியென்பது உடன்பாட்டுவினை (Positive action.)

வேதனையைத் துறந்து—வேதனை என்பது வருத்தம். அது இங்கே உலக நுகர்வு வாழ்வி லுண்டாகும் இன்ப துன்ப உணர்ச்சியைக் குறிக்கின்றது. உலக நுகர்வு வாழ்வை விட்ட பின்னும் அதன் கண்முன் அடைந்திருந்த இன்ப துன்ப உணர்ச்சியானது வாசனையாக உள்ளத்தில் தங்கி யிருத்தலை வேதனை என்ருர்.

துன்பம் சிறிதும் கலவாத மெய் இன்ப மடைதற்கு, அவ்வாசனை யையும் அற ஒழித்தல் வேண்டும் என்பார் துறந்து என்றார்.

செய்யர் ஆனார் சிந்தையானே—செம்மை + அர் = செய்யர். செம்மை என்ற பண்புப் பெயரில் மைவிகுதி கெட்டு முன்னின்ற மெய் ஆகிய மகர ஒற்று யகர ஒற்றாகத் திரிந்து யகர ஒற்று இரட்டித்தது. செம்மை என்பது நேர்மை ஒற்றுமை. செய்யர் ஆதல் என்பது சிவம் வேறு தாம் வேறு என்னாது தன்முனைப்பு முற்றிலும் நீங்கிச் சிவத்தினோடு இணங்கி அத்துவிதமாய்க் கலந்திருத்தல். இக்கருத்து, "சிவமான சிந்தையிற் சீவன் சிதைய, பவமான மும்மலம் பாறிப் பறிய, நவமான அந்தத்தின் நற்சிவ போதந், தவமா மவையாகித் தானல்ல வாகுமே" என்று திருமூலர் (2539) வது திருமந்திரப் பாட்டிலும், "சித்தந்தெளிந்து சிவமானோ ரெல்லோர்க்கும், கொத்தடிமையான குடிநான் பராபரமே" என்று தாயுமான சுவாமிகள் 783-வது பாட்டிலும், 'சிவனை ஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே மருளெலாம் நீங்கக் கண்டு வாழலாம்' என்று சிவஞான சித்தியார் மங்கல வாழ்த்துப் பாட்டிலும் கூறப்பட்டிருத்தல் காண்க. திருநாவுக்கரசு அடிகள் 'சிவனை நான் சிந்தையிற் கண்டவாறே' (311—11) என்றும், 'சிந்தையிற் சிவனாய் நின்ற உருவினைக் கண்டு கொண்டதென் னுள்ளமே' (212—8) என்றும் கூறியருளினார். இன்னும் இக்கருத்து தேவார திருவாசக முதலிய பன்னிரு திருமுறை நூல்களிலும் சைவ சித்தாந்த நூல்களிலும் பல இடங்களிற் கூறப் பட்டிருக்கின்றது.

தேவர் குலக்கொழுந்து—குலம் = கூட்டம். கொழுந்து-மரம் செடிகளி னுடைய இரசத்தால் (Juice) உண்டாதலால் சிவபெருமான் தேவர் கூட்டத்துக்கு உயிராய் அவர்களுக்குத் தலைவனாய் விளங்குகின்றவன் என்ற கருத்துக் கூறப்பட்டது. செம்மை யானார் சிந்தையானே என்பதனால் சிவபெருமான் மாந்தருக்கு உயிராயுள்ள தலைவனாய் விளங்குகின்றார் என்று கூறியபின் தேவர்களுக்கும் அவ்வாறே தலைவனாய் விளங்குகின்றார் என்பது கூறப்பட்டது.

உன்றன் நாமம்—பிரணவம் அல்லது சி முதலாகக் கூறப்பட்ட அஞ் செழுத்து. பிரணவ அஞ்செழுத்தும் ஒரே கருத்தை விளக்கு கின்றன என்பது திருமந்திரம் 975, 2503 பாட்டுக்களிற் கூறப் பட்டிருத்தல் காண்க.

நாயேன்—அடிகள் தம்மை நாய்க்கு ஒப்பிட்டுக் கூறியது செய் நன்றி மறவா திருக்கும் குணம் பற்றியாகும். இழிதகைமையானது தாம் சிவபெருமானது உதவியின்றி இறையளவும் வாழாதிருத் தல் பற்றியாகும்.

நைவேன் நாளும்—'துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும் நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்' என்று அடிகள் அஞ்செழுத் துப் பதிகத்திற் கூறி யிருப்பது காண்க.

வையமுன்னே வந்து நல்காய்—தீவிரதர சத்திநிபாதம் அடைந்த உயிர்க்குச் சிவபெருமான் குருவடிவில் வந்து பேரின்பந் தந்தருளுதல் கூறப்பட்டது. மாணிக்கவாசக அடிகளுக்குச் சிவபெருமான் திருப்பெருந்துறைக்கு வந்து அருள் செய்தது ஒரு எடுத்துக்காட்டாகும்.

இந்தத் தேவாரப் பாட்டில் முதல் இரண்டு அடிகளிலும் சிவபெருமான் இன்ன தன்மையன் என்பது கூறப்பட்டது. மூன்ருவது அடியானது அத்தன்மைக்கு இணங்க பக்குவம்வந்த ஒருவர் செய்யும் செயலைக் கூறுகிறது. நாலாவது அடி அவர் சிவபெருமானை நோக்கிப் பேரின்பம் அருளுதலை வேண்டிக் கொள்ளுதலைக் குறிக்கிறது. அடிகள் இக்கருத்துக்களைத் தம்மேல் வைத்து உலகுக்கு அறிவுறுத்தியருளினர். ‘பொய்மை நீக்கி’ என்பதனல் ஞானத்தில் சரியையும், ‘மெய்யர் ஆகி’ என்பதனல் ஞானத்திற் கிரியையும், ‘வேதனையைத் துறந்து’ என்பதனல் ஞானத்தில் யோகமும் ‘செய்யரானர் சிந்தையானே’ என்பதனல் ஞானத்தில் ஞானமும் கூறப்பட்டன. ‘பொய்மை நீக்கி’ என்பதனல் நிவிர்த்திகலை ஒளிவிளக்கமும், ‘மெய்யர் ஆகி’ என்பதனல் பிரதிட்டாகலை வித்தியா கலைகளின் ஒளிவிளக்கமும், ‘வேதனையைத் துறந்து’ என்பதனல் சாந்திகலை ஒளிவிளக்கமும் ‘செய்யரானர் சிந்தையானே’ என்பதனல் சாந்தியாதீதகலை ஒளிவிளக்கமும், சிந்தைக்கு உண்டாயின என்பது கூறப்பட்டது. ‘பொய்மை நீக்கி’ என்பதனல் பொய்த்தன்மை (அசத்துத் தன்மை) நீக்கமும், ‘மெய்யராகி’ என்பதனல் பொய்த்தன்மை நீங்கியதனு லுண்டாகும் மெய்யறிவு விளக்கமும், ‘வேதனையைத் துறந்து’ என்பதனல் மெய்யறிவினல் துரிய நிலையிலுண்டாகும் பேரின்பத் தோற்றமும், ‘செய்யரானர், சிந்தையானே’ என்பதனல் துரியாதீத நிலையிலுண்டாகும் அத்துவிதக் கலப்புப் பேரின்பமும் சிந்தையில் முறையே ஒன்றன்பின் ஒன்று எதுவும் பயனுமா யுண்டாகின்றன என்க. துரியாதீத நிலைவரை உயிருக்குச் சாந்தியாதீத கலையிலுள்ள சிந்தை உண்டு என்பது, “பெத்தமு முத்தியும் பேணும் துரியமும்—சுத்த வதீதமுந் தோன்ருமற் ருனுணும்—அத்த னருளென் றருளாலறிந்தபின்—சித்தமு மில்லை செயலில்லை தானே” என்று திருமந்திரம் 2255-ம் பாட்டிற் கூறி யிருத்தல் காண்க. 1634 வது பாட்டின் கருத்தையும் நோக்குக. இதனல் சிந்தையின் (உள்ளத்தினது) தூய்மை எத்துணைப் பேரின்பவாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது என்பதும், உலக வாழ்விலும் சிந்தையானது தூய்மை அடையா விட்டால் பேரின்பவாழ்வுக்குரிய தூய்மை தோன்ருது என்பதும் நன்கு தெளியப்படும். இப்பாட்டின் முதல் இரண்டு அடிகளின் கருத்து திருநாவுக்கரசு அடிகள் பாடிய ‘திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மை செய்து’ என்ற திருக்குறுந்தொகைத் தேவாரப்பாட்டில் கூறப்பட்டிருக்கின்றது.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை

சமயமும் தத்துவமும்:
Religion & Philosophy

[பண்டிதர் சி. வீரபாகுப்பிள்ளையவர்கள்]

(முன் சஙிம-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்மக்கள் இம்பந்திரப் பொருளாகிய பரமசிவத்தைத் தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வந்திருக்கிறார்கள். நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்களிலே மிகவும் பழைமையானது தோல் காப்பியம். அது இலக்கண நூல். அந்நூலை இயற்றியவர் ஒல்காப் புலமைத் தோல்காப்பியனார். அவர், நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலென நான்காக வகுத்து ஒவ்வொரு நிலத்துக்கும் தெய்வமுங் கருவும் கூறியிருக்கிறார். இந்நிலங்களுள் குறிஞ்சி நிலமே முதன் முதல் தோன்றியது. "கல்தோன்றி மண்தோன்றாக்காலம்" என்று பெரியோர் கூறுவர். அந்நிலத் துக்குத் தெய்வம் முருகனும் துர்க்கையும். தொல்காப்பியர் முரு கனைச் 'சேயோன்' என்கிறார். முல்லைநிலத்துக்குத் தெய்வம் மாயோன். மாயோன் என்பதற்குக் கருநிறமுடையவன் என்று பொருள். மருத நிலத்துள்ளவர்கள் பெரும்பாலும் உழவர்கள். ஆகவே அந்நிலத்துத் தெய்வம் இந்திரன். தொல்காப்பியர் இந் திரனை வேந்தன் என்று அழைக்கிறார். பரிமேலழகரும் "இடை முரிந்து வேந்தனும் வேந்துருக்கும்" என்றவிடத்து வேந்தன் என்பதற்கு இந்திரன் என்று பொருள் கூறித், தொல்காப்பியர் கூறிய "வேந்தன்மேய தீம்புனலுலகமும்" என்றதையே எடுத் துக் காட்டியிருக்கிறார். நெய்தல் நிலத்துக்குத் தெய்வம் வரு ணன். உப்பும் மீனும் வைத்துத்தான் நெய்தல் நிலத்தார் வாழ வேண்டும். அவர்கள் வலைவளம் தப்பினால் சுறா மீனது கொம்பை நட்டு அதில் வருணனை நிறுத்தி வழிபடுவார்கள்.

இந்த நான்கு நிலத்துக்குரியவர்களிலும், அந்தணர், அர சர், வணிகர், வேளாளர்களிலும் அறிவுநூல் கற்ற பெரியவர்கள் ஆதியில் சிவனையே தங்கள் உபாசனாமூர்த்தியாகக் கொண் டிருக்கிறார்கள்.

"கண்ணவனை யல்லது காணா செவியவன
தெண்ணருஞ் சீரல்ல திசைகேளா—வண்ணல்
கழலடி யல்லது கைதொழா அஃதால்
அழலங்கைக் கொண்டான்மாட் டன்பு"

என்ற பழஞ்செய்யுளே இதற்குச் சாட்சி. இப்பழம்பாட்டைச் சேரமான் பெருமாள் நாயனார் பொன்போலப் போற்றித் தாம்

அருளிச் செய்த திருவுலாப் புறத்திலே எடுத்தாண்டிருக்கிறார்கள். பிரயோக விவேக நூலிலும் இது மேற்கோளாக வருகிறது. கடைச் சங்க நூலாகிய இன்னா நாற்பதின் கடவுள்வாழ்த்திலே

"முக்கட் பகவன் அடிதொழா தார்க்கின்னா
பொற்பனை வெள்ளையை உள்ளா தொழுகின்னா
சக்கரத் தானை மறப்பின்னா தாங்கின்னா
சத்தியான் தாள்தொழா தார்க்கு"

என, முழு முதற் கடவுளாகிய சிவபிரானை முன்கூறிப் பின்புதான் தொல்காப்பியர் தெய்வக் கருவாகக் கூறிய திருமாலையும், சண்முகனையும் கூறியிருக்கிறது.

பரிமேலழகர் தமிழ்நாட்டு வேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்களை "படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவந்த குடிகள்" என்கிறார். இம்மூவேந்தர்களுக்குங் குலதெய்வம் சிவபெருமானே! இதனைக் கடைச்சங்க நூல்களால் அறியலாம். இளங்கோவடிகள், அவர் தமையனான சேரன் செங்குட்டுவனை "செஞ்சடைவானவன் அருளினில் விளங்க, வஞ்சித் தோன்றிய வானவ" என அவன் சிவபிரான் திருவருளால் பிறந்தான் என்கிறார். காரிகிழார் என்ற புலவர் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பார்த்து,

"பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே"

என்கிறார். சோழன் கரிகாற் பெருவளத்தான் தன் பகைவர் உரிமைப் பெண்களைக்கொண்டு பொதியிலின்கண் இருந்த சிவலிங்கப் பெருமானுக்குப் பணிவிடை செய்யும்படி ஏற்படுத்தியிருக்கிறான் என்று பட்டினப்பாலை கூறுகிறது.

பரத சாஸ்திரம் ஒரு பொதுநூல். அது சமய நூலன்று. அந்நூலுடையார் "இந்திரன், பிரமன், விட்டுணு வென்னும் தேவருக்கு, முறையே வச்சிரம், கமலம், சங்கமென்னும் முத்திரைகளாலும், சிவபிரானுக்குச் சிரசில் அஞ்சலி முத்திரையாலும் அபிநயம் கூறியது" சிவபிரானது முதன்மையைக் காட்டுகிறது.

இவைகளால், நெடுங்காலமாக நம் பாரதநாடு சிவனையே முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபட்டு வந்திருக்கிறது என்ற உண்மையை நாம் அறியலாம். சிவன் தேவ தேவன். அவனை வணங்காத தேவர் யாருமில்லை. அவனால் வணங்கப்படுவாரும் யாரும் இல்லை. அதனால் அப்பெருமானை ஒரு பெரியார்,

"சேர்ந்தறியாக் கையானை" என்றார்.

தமிழர் மாவீரர்கள். போர் என்ற பேரைக் கேட்டாலே அவர்கள் தோள் மலைபோலப் பூரித்துவிடு மென்று கவிச் சக்கரவர்த்தி கம்பர் கூறுகிறார். வடநாடு முழுதும் ‘தொண்டு மொழிந்து தொழில் கேட்கும்படி’ செய்த அசோகச் சக்கரவர்த்திகூடத் தமிழ் நாட்டில் காலெடுத்துவைக்கவில்லை. கூதிர்ப்பருவத்திலே தமிழர் போருக்குச் செல்வார்களாகையால் அதற்கு முன் கார்ப்பருவத்தின் முடிவில் நவராத்திரி விழா அவர்களால் கொண்டாடப்பட்டிருக்கிறது. தங்களுக்கு வெற்றி வேண்டுமென்று அவர்கள் இவ்விழாவைக் கொண்டாடி இருக்கிறார்கள். வெற்றிக்கு வீரம்வேண்டும். அதற்கு, வீரத்துக்குரிய தெய்வமாகிய துர்க்கையை அவர்கள் வழிபட்டார்கள். இனி அவ்வெற்றிக்கு வீரம்மட்டும் போதுமா? செல்வமும் வேண்டும். அதற்காக அவர்கள் இலக்குமியையும் கூட வணங்கியிருக்கிறார்கள். இன்னும் வீரமும் செல்வமும் இருந்தாலும் அறிவு ஒன்று இல்லையானல் அவை பேடி கைவாள்களே! அதற்காக அவர்கள், அறிவுத் தெய்வமாகிய சிந்தாதேவி—சரச்சுவதியையும் வழிபட்டார்கள். இம்மூவருக்கும் அமைந்த திருவிழாவே நவராத்திரி விழா. சரச்சுவதியம்மைக்கு ஏடுகள். வீரத் தெய்வத்துக்கு மடக்காவது, சூரியாவது வைக்கப்படுகின்றன. செல்வத் தெய்வமாகிய இலக்குமிக்கு விம்பத்தின் மேல் பொன்னுபரணம் அணியப்படுகிறது. இவ்விதம் சாஸ்வதி பூசையன்று அறிவுத் தெய்வமாகிய சரச்சுவதி, வீரத்தெய்வமாகிய துர்க்கை செல்வத் தெய்வமாகிய இலக்குமி என்ற மூவரையும்தான் நம்மவர் வழிபடுகிறார்கள், நாமும் அம்மூவரையும் வணங்கி வாழ்வோமாக.

தமிழர் சமயம்

[உயர்திரு. சுத்தானந்த பாரதியார்]

தமிழர் அருட் சமயத்தின் பிழிசாறு இதுவே:—

உள்ளம் சிற்சபை, தகர நிலயம். அதில் ஒரு இன்பக்கனல் “தான் தான்” என எழுந்தாடுகிறது; இதை அருளறிஞராய யோகியர் உள்ளூறவால் உணர்வர். அதுவே தீவண்ணச் சிவம். அது எல்லா மாந்தருக்கும் பொது. அச்சிவம் (இன்பம், அமுது) எம்மதமும் சம்மதமாய், எல்லாச் சமய ஆறுகளும் புகும் எல்லையற்ற கடலாய் உள்ளது. அது உண்மை யறிவின்பக் கடல்; சமய நெறிகளெல்லாம் அதினெழுந்து வீசும் அலைகளே. அது இயல்பென்றுந் திரியாது, குணங்குறியறத் தன்னை அருட்

புலவரின் உள்ளத்திற் கொடுத்துக் காட்டும் பரம்பரம் பராபரம், மௌனப் பரவெளி. அது தனது அருளால் எல்லாம் தானாகியும் எதிலும் தாக்கற்ற தனிமுதல். கதிரவன் (கதிர் + அவன்) தான் நின்ற நிலையிலிருந்து தனது கதிர்களால் எங்கும் நிறைந்தொளிர்கிறான். சிவம் நிலைபெருமான்; தனது ஆணையான அருளால் எங்கும் நிறைந்து எல்லாந் தானானது. கதிரவன் எழுந்ததும் உலகம் விழித்து வினைபுரிகிறது; அதுபோலவே பரசிவன் சந்நிதிக்கே ஐந்தொழிலும் ஆம். சைவசமயம் உலகைச் சிவாலயமாகவும், சிவனை உயிர் மேனியனாகவும், உயிர்களை நடமாடுங் கோயில்களாகவும் காண்கிறது. புறச்சமயங்களனைத்திற்கும் இதில் இடமுள்ளது. எல்லா ஆறுகளுக்கும் கடலில் இடமிருப்பதுபோல இந்த இயற்கை நெறி பல வியல்பான மாந்தர்க்கு, அவரவர் அறிவு வளர்ச்சிக்கேற்ப (Evolution of consciousness) தநுகரண புவன போகாதிகளை நுகரும் உடல்வாழ்வு முதல் "ஈறிலாப்பதங்கள் யாவையுங் கடந்த இன்ப"மான சுத்த சிவ நிலை மட்டும் இடங்கொடுத்து படிப்படியாக உயர்ந்து செல்கிறது. மக்களை ஒரு குலமாக்கி, உலகைச் சிற்சபையாக்கி, அதில் ஒரு இன்பப் பொருளின் அறிவுப் பொது நடத்தை விளக்கி உலகெலாம் உணர்ந்து உவந்து சேர்ந்து வாழத்தக்கது சிவமதம்.

தில்லைச் சிவனார் திருவிளை யாட்டிற் செழித்தது சைவமதம்
 தேவார முதினுந் தித்திக்குஞ் செந்தமிழ்ச் செல்வியின் சைவமதம்
இல்லை யென்பாருள்ளுந் தானென் றிதயத் திருப்பது சைவமதம்
 எம்மத வுண்மைக்குஞ் சம்மதமான வியல்மதஞ் சைவமதம்
இல்லறத் திற்செய்ய நல்லற மேன்மை யிணைத்தது சைவமதம்
 இப்புலைக் கூட்டையுந் துப்புர வாக வியற்றிடுஞ் சைவமதம்
எல்லா வுயிரு மிறைவ னுடலென் றிசைப்பது சைவமதம்
 இவ்வுல கிற்கெல்லா மோவ்விய வோர்மத மீடறு சைவமதம்.

இத்தகைய பொது நெறியை அருள் வழியை உலகெலாம் பரப்புவதற்குத் தக்க சாஸ்திர அறிவும், அருள்வளமும் கொண்ட புலவர்கள் செல்லவேண்டும். முதலில் இந்தப் பொது நெறியைத் தமிழரனைவரும் தழுவவேண்டும். ஐரோப்பா முழுதும் கிறிஸ்து சமயத்தைத் தழுவியிருப்பது போலத் தமிழரனைவரும் இவ்வருட் சமயத்தை தழுவி உள்ளத்தில் இன்பக் கடவுளுணர்வுடன் உலகையெல்லாம் சிற்சபையெனவும், மக்களையெல்லாம் நடமாடுங் கோயில்களெனவுங் கருதியொன்று படுக. இச்சமய வொற்றுமையே நமது முன்னேற்றத்தின் வேர்.

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

இந்தியாவும் சாவகமும்

[திரு. S. நடராஜன், B. A.]

"சீனமிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத்தொழில் வாணிப மும்மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு."
"சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு."

—பாரதி.

முன்னுரை

1. கிழக்கிந்தியத் தீவுக் கூட்டங்களில் ஒன்றான சாவகத்தில் இந்தியக் கலைகளும் நாகரிகமும் இற்றைவரைப் பொலிவுடன் மிளிருகின்றன. இக்காரணம் பற்றி இத்தீவை "இந்தியத்தீவு" (Island India) என வழங்குகின்றனர். இத்தீவில் கலிங்கம் என நாட்டுப் பெயரும், மதுரை, சுமேரு என நகர்ப் பெயர்களும், சரயு, வாசுகி என நதிப்பெயர்களும் நம் நாட்டுப்பெயரை ஒட்டி வழங்கப்பெறுதல் நோக்கற்பாலதாம். இராமாயண, மாபாரதப் பெருங்கதைகள் இந்தியாவி லிருந்து வெகு காலத்திற்கு முன்னரே சாவகத்தில் பரவி இன்றுவரை அங்கு நிலவி வருகின்றன. வான்மீகியார் இராமாயணம் தொகுப்பதற்கு முன்னரே இப் பெருங்கதை சாவகத்தில் பரவி யிருந்ததாம்*. இவ்விரு பெருங் கதைகளும் தங்கள் நாட்டில் நடைபெற்றன வென சாவகத்து மக்கள் நம்புகின்றனர். சாவகத்தின் சிற்பக்கலையும் நம் நாட்டின தேயாம்.

பண்டைச் சாவகம்

2. சாவகம் சுமித்திரா முதலிய தீவுகள் குமரிக்கண்டத்தின் (Gondwana continent) ஒரு பகுதியே. இக்குமரிக் கண்டம் தென் அமெரிக்காவி லிருந்து தென் அட்லாண்டிக் மாகடல், தென் ஆஃப்ரிக்கா, இந்திய மாகடல், தென்னிந்தியா, ஆய நிலநீர்ப் பகுதிகளைத் தன்னுட்கொண்டு திகழ்ந்தது. பின்னர் நிகழ்ந்த

---

* It is believed by some scholars that the version of Ramayana which reached Java was earlier than the version of Valmiki.

O. C. GANGOLY,
The Art of Java.

கடற் கோட்களால் இவை தமிழ் நாட்டினின்றும் பிரிக்கப்பட்டுத் தீவுகளாய் மாறிவிட்டன. தொல்லுயிர் நூலாரும் (Anthropologists) நில நூலாரும் (Geologists) சாவகம் சாலவும் பழைய நிலப்பரப்பென்று ஒருமுகமாய்க் கூறுகின்றனர்.

3. வரலாற்றுக் காலவரையறைக்குட்பட்ட காலத்திலும் தமிழர் சாவகத்தில் வதிந்து வந்தனர். பண்டை ஞான்று தமிழர் வாழ்ந்துவந்த நாட்டில் பின்னர் ஆரியர் நுழைந்தனர். அவர்கட்குப் பின்னர் மகம்மதியர் சென்றனர். பின்னர் ஐரோப்பியர் அந்நாட்டு மன்னராயினர். கடற் கோட்குப் பிற்பட்ட வரலாற்றை, (1) இந்து பௌத்தர் காலம் (2) மகம்மதியர் காலம் (3) ஐரோப்பியர் காலம் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். ஈண்டு, இந்து பௌத்தர் காலத்து வரலாற்றை ஆராய்வாம். இஃது 15-ம் நூற்றாண்டின் இறுதிவரைச் செல்கிறது.

வரலாற்றுக் காலச் சாவகம்

இந்து பௌத்தர் காலம்

பிற கீழை நாடுகளைப்போல் சாவகத்திற்கும் வரையறுத்துத் தொகுக்கப்பட்ட வரலாறு கிடையாது. அஃது பண்டைய நூல்களி லிருந்தும், கல்வெட்டுக்களி லிருந்தும் இஞ்ஞான்று ஆராயப்பட்டு வருகிறது. சாவகத்தில் வழங்கும் மொழி காவி யெனப்படும். இதில் வடமொழியும், தமிழும் விரவியிருக்கின்றன. காவியில் வழங்கும் பரரதன் (Pararaton) நாகரக்கிருதகமா (Nagarakrtagama) என்னும் இரு பெருங் கதைகளும்; இத் தேசத்து வரலாறுகளும் இலக்கியங்களும்; சீனதேசத்து வரலாறுகளும் இலக்கியங்களும்; கிரேக்க அரேபியநாட்டு இலக்கியங்களும்; சாவகம், சுமத்திரா, மலாக்காமுதலிய நாடுகளில் கிடைக்கும் கல்வெட்டுக்களும் சாவக வரலாற்றை ஆராய்ந்து தொகுக்க ஏதுவாகின்றன. வங்கத்தின் தலைநகராய கல்கத்தாவில் இந்தியக் கலையும் நாகரிகமும் பிறநாடுகளில் பரவி இருந்தமையை ஆராயும் நோக்கத்துடன் சிலஅன்பர்கள் ஸர். பி. சி. ரே. (Sir P. C. Ray) அவர்களைத் தலைவராக்கொண்டு "மாபெரும் இந்தியக் கழகம்" (Greater India Society) என ஒன்று நிறுவிப் பணியாற்றி வருகின்றனர். பொதுவாக உலகின் பண்டை வரலாற்றையும், சிறப்பாக இந்திய நாட்டின் வரலாற்றையும் நன்குணரத் தமிழ் மொழிஅறிவு சாலவும் வேண்டற்பாலது. உலகில் நாகரிகத்திற்கு வித்திட்ட இப்பழந் தமிழின் சிறப்புணரார் எங்ஙனம் உலக வரலாற்றை ஆராய்ந்து மறுக்கொணா முறையில் தொகுக்கக் கூடும்? தமிழரும் தமிழ் அன்பர்களும் இக் கழகத்தில் உரிய பங்கு எடுத்துக்கொள்ளுதல் விரும்பத்தக்கதாம்.

சான்றுகள்

அகத்தியர்

விந்தியமலையை முதன்முதற் கடந்து தமிழகம் போந்த அகத்தியர் சாவகத்திற்கும் சென்றதாகத் தெரிகிறது. இவர் அந்நாட்டில் சைவத்தைப் பரப்பினர். முதல் கோவில் அந்நாட்டில் இவரால் கட்டப்பட்டது. சைவத்தை பரப்பிய இம் முனிவரைப் பிற்காலத்தில் சாவகத்து மக்கள் கடவுளாக வணங்கத் தொடங்கிவிட்டனர். அகத்தியர் வணக்கம் சாவகத்தில் இன்றும் வழக்கில் இருந்து வருகின்றது. அகத்தியரைச் சிவகுரு எனவும், சிவபௌத்தர் எனவும், பத்திரகுரு எனவும் கொண்டாடுகின்றனர். கி. பி. 760-ம் ஆண்டில் செதுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று, கஜாயனன் என்ற அரசன் தன்முன்னோர்கள் தேவதாரு மரத்தில் செய்து வணங்கிவந்த அகத்தியர் சிலைபோன்ற தொன்றைக் கருங் கல்லில் செய்ததாகக் கூறுகின்றது*.

இராமாயணம்

சுக்கிரீவன் நாற்றிசைக்கும் சீதாதேவியைத்தேடி வரும்படி அனுப்பிய ஒற்றர்கட்குச் சாவகத்தைப்பற்றி, உளங்களிக்கும் பசுங் கதிர்கள் நிறைந்ததும், தங்கக்கனிகள் (Gold mines) உள்ளதுமான நாடு எனச் சிறப்பித்துக் கூறுவதை இராமாயணத்துக் காண்கிறோம்.

தாலமி

அலெக்ஸாந்திரியா நகரின் வானநூல் அறிஞராய தாலமி (Ptolemy) என்பார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் (கி.பி. 130) இயற்றிய தம் நிலநூலில் (Geography) சாவகத்தீவை யவத்தீவு எனவும் கழனிசூழ்நாடெனவும் எழுதியுள்ளார்.

ஹியூ ஹான் சௌ

சீன தேசத்து வரலாறாகிய ஹியூ ஹான் சௌ (Heou han chou) என்பதில் ஏறக்குறைய கி. பி. 132-ல் தேவவர்மன் என்னும் சாவகத்து இந்து அரசன் ஒரு தூதுக் கூட்டத்தை சீன தேசத்துக்கு அனுப்பியதாயும், சீன அரசர் தேவவர்மனுக்குப் பரிசாக தங்க இலச்சினை யொன்றும் ஊதா நிறமுள்ள பட்டு ஆடை ஒன்றும் அளித்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது.

சாகவத்தைப் பற்றிக் கூறக்கூடிய மிகப்பழைய கல் வெட்டு ஒன்று கீழ்ப்போர்னியாவில் கிடைத்துளது. இதன் காலம் 4-ம்

---

* Another Shaiva Inscription discovered at Dinaya in Eastern Java dated 682 Shaka (760 A. D.) describes the construction of a black stone image of Agastya Rishi. "In order to get rain this image of Agastya Kumbhayoni was consecrated in *Kumbha-lagna* by the strongminded King in the fine *Maharshi-bhavana*."

DR. B. R. CHATTERJEE,
India and Java.

கல்வெட்டுக்கள்

நூற்றாண்டு. இக்கல்வெட்டின் எழுத்து பல்லவர் எழுத்துப்போற் காண்கிறது.* இக்கல்வெட்டில் அஸ்வவர்மன் என்ற ஒரு வல்லரசர் பெயரும் அவர் மகனுரான மூலவர்மன் என்பார் பெயரும் காணப்படுகிறது. மேற்குச் சாவகத்தில் அகப்பட்ட ஒரு கல்வெட்டில் பூர்ணவர்மன் என்னும் அரசனைப்பற்றிக் கூறுகிறது. இக்கல் வெட்டும் பல்லவர் எழுத்தாலேயே செதுக்கப்பட்டிருக்கிறது. இதன் காலம் 5-ம் நூற்றாண்டு†. நடுச்சாவகத்தில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டின் எழுத்தும் பல்லவர் எழுத்தாகவே இருக்கிறது. இதன் காலம் கி. பி. 732. கீழைச் சாவகத்தில் கிடைத்துள்ள கி. பி. 760ம் ஆண்டுக் கல்வெட்டும், ஆண்டுகளின் கல்வெட்டுகளும் சாவகத்தின் வரலாற்றை ஆராயத் துணைபுரிகின்றன.

8-ம் நூற்றாண்டு வரை சாவகத்தில் இந்துசமயம் தனியே இருந்துவந்தது. பின்னர் பௌத்தம் தலைதூக்கிற்று. ஏறக்குறைய கி. பி. 80ல் அஜிசாக என்பவரின் தலைமையில் ஒரு குழுவினர் கூர்ச்சரத்திலிருந்து சாவகத்தில் குடியேறினர். ஆனால் பெருந்திரளான மக்கள் தென்னிந்தியாவிலிருந்தும் சென்று குடியேறிப் பல்வளம் பெருக்கினர். இவர்களின் சமயம் ‡சைவமாம். மணிமேகலையில், சாவகத்தில் நாகபுரத்தை தலைநகராக் கொண்டு பூமிச்சந்திரன், புண்ணியராசன் என்ற அரசர்கள் அரசாண்டமை கூறப்படுகிறது. நாகபுரம் என்பது நாகர்கள் வாழ்ந்து வந்தமையால் ஏற்பட்ட பெயர் போலும். இந்நாகபுரம் மேற்குச்சாவகத்தில் இருந்திருத்தல்கூடும். சாவகத்திற்கே நாக நாடு என ஒரு பெயர் உண்டு என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

---

* "Now if the character used in western Java inscriptions be compared with that of the Vengi and Pallava inscriptions, it will at once be seen that it is nearest to the last For these reasons it appears that the source of the primitive Hindu civilization in Java must be sought for in the North Tamil coast rather than in Kalinga proper." Dr. Burnell's **Elements** quoated by O. C GANGOLY,

The art of Java.

† The Script is the same which later on became known as Pallava grantha and which is found in early Borneo.

‡ The largest streams of immigrants flowed from the eastern Coast of India. Broadly speaking the culture of Java between the 4th to 12th centuries is chiefly related to that of Southern India and the Hinduism of Java is mainly though not chiefly Saivaite

O. C. GANGOLY,
The Art of Java.

5,6-ம் நூற்றூண்டுகளில் மேற்குச் சாவகமும், 7,8,9 நூற்றூண்டுகளில் நடுச்சாவகமும் 10,11,12,13,14-ம் நூற்றூண்டுகளில் கீழைச்சாவகமும் வலிமை பெற்று வல்லரசுகளால் ஏனைய அக்கம் பக்கத்து நாடுகளை வென்று தம்முள்ளடக்கி ஆண்டு வந்தன. முறையே மேற்குச் சாவக, நடுச்சாவக, கீழைச்சாவக வரலாற்றை ஆராய்வாம்.

(தொடரும்)

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(முன் சரு௮-ம் பக்கத் தொடர்ச்சி)

14. "குன்றியேய்க்கு முடுக்கை"—"குன்றியுங் கோபமுமொன்றிய வுடுக்கை"

(தொல் பொருள்-உவமவியல்-மேற்கோள்-பக் 103)

செந்நிறத்தைக் குறித்தற்கு, "கோபத்தன்ன தோயாப் பூந்துகில்" என்றதும் ஈண்டு அறிதற்பாலது.

15. "சேவலங் கொடியோன்"
"புகரில் சேவலங்கொடியேன்"—(முருகு—39)

16. "கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி"
—(முருகு 210-211,

17. "சேவற் கொடியுடையானே"

18. "சேவற்பதாகை", "கோழிக் கோழிக் கொடியன்"
—(கந்தரலங்காரம்)

19. "கட்டுடைச் சூருடல் காமங் கொண்டு
பற்றியுட் புகுந்து பசுங்கடல் கண்டு
மாவொடுங் கொன்ற மணிநெடுந் திருவேல்
சேவலங் கொடியன்" —(கல்லாடம்-10).

20. "கூரரிவாளின் ரேகையஞ் சேவற்கொடியோன்"
—(கல்லாடம்-90)

21. "சேவலங் கொடிச் சேவகன்"
—(திருமுல்லைவாயிற் புராணம் நாட்டுப் ப-35)

சேவல்:—இது கோழிச் சேவலைக் குறிக்கும்; அது முருகன் கொடியின்கண் விளங்குவதாகலின். அதனை, "கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி"—(முருகு-38) என்பதால் அறிக.

"கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்"
—(சிலப்பதிகாரம் 14:7-10) என்பதும் காண்க.

இனிச் சேவல் என்பது ஆண் மயிலுமாம். என்னே ?
"பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ"
—(முருகு 122) என்பதனாலும்,
"மணிமயி லுயரிய மாறு வென்றிப்
பிணிமுக வூர்தி யொண்சேயோனும்"—(புறநானூறு 56-8)
"மணிநிற மஞ்ஞை யோங்கிய புட்கொடி
பிணிமுக மூர்ந்த வெல்போர் இறைவ" (பரிபா-17:48-9)

"பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய
வொடியா விழவி னெடியோன்"—அகநானூறு-149:15-6)
"பிணிமுக மஞ்ஞை செருமுகத் தேந்திய
மூவிரு திருமுகத் தொருவே லவற்கு"—(கல்-7)

என்பனவற்றாலும் அறியலாகும்.
"சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி மயிலலங் கடையே"
—(தொல். பொருள்-மரபியல்-48 சூ)

என்பதனால் தோகையோடு கூடி மென்மைத் தன்மைத்தாய்ப் பெண் தன்மை கொண்ட மயிலிடத்துச் சேவற் பெயர்க்கொடை சேராதெனின், வேலன் கொடியில் வீறுபெற்று விளங்கிப் போர்முகத்து நின்று ஆண் தன்மை மிக்க மயிலிடம் சேறற்கு இழுக்கில்லை. என்னே?

"செவ்வே லூர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும் படும்" என்று அச்சூத்திரத்தின் இறுதியில் உரை கூறிக்கிடத்தலால் என்க. மற்றும் ஊர்தியும் கொடியும் ஒன்றாகவே திருமாலும், சிவபிரானும் கொண்டிருத்தலும் கருதத்தக்கது. இதனே,
"ஊர்தி வால்வெள் ளேறே சீர்கெழு
கொடியு மவ்வே றென்ப"—(புறம். கடவுள்-வாழ்த்து)

என்பதாலும் அறிக.

"நெஞ்சு பக."—நெஞ்சு-நடுவிடம். இதனைக், "குன்றின் நெஞ்சு பக எறிந்த அம்சுடர் நெடுவேல்" என்புழிப்போல நெஞ்சு என்பது ஈண்டும் அகப்பொருட்டாய் நின்றது" —(திருக்குறள் 1250 உரை)

"விஞ்சையம் பெருவரை நெஞ்சகம் பிளந்து"
—(பெருங்கதை 1: 51.8)

பக=பிளக்க.
"மணி திகழ் விறன்மலை வெம்ப மண்பக" —(கலி. 20-5)
(மண்பிளக்க—நச்சினார்க்கினியர் உரை)
"புலம்பு வீற்றிருந்த நிலம்பகு வெம்சுரம்" (அகம் 335-8)

"வான நிலம்பக வறந்த புலம்புறு சேணிடை"
—(தமிழ்நெறிமேற்கோள்)
"நிலம்பக வெம்பிய நீள்சுரம்" —(வளையாபதி)

குன்றின் நெஞ்சுபக எறிந்த அம்சுடர் நெடுவேல்:—

"சொன்ன க்ரௌஞ்ச கிரி யூடுருவத் துளைத்த வைவேல்"
—(கந்தாலங்காரம்)

"குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ" (முருகு-266-7)

"பார்முதிர் பனிக்கடல் கலங்க வுள்புக்குச்
சூர்முத றடிந்த சுடரிலை நெடுவேல்" —(முருகு 45-46)

"பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்குச்
சேயுயர் பிணிமுக மூர்ந்தம ருழக்கித்
தீயழ றுவைப்பத் திரியவிட் டெறிந்து
நோயுடை நுடங்குசூர் மாமுத றடிந்து
வென்றியின் மக்களுள் ஒருமையொடு பெயரிய
கொன்றுண லஞ்சாக் கொடுவினை கொஃறகை
மாய வவுணர் மருங்கறத் தபுத்த
வேல்" —(பரிபாடல். 5-17)

"குருகுபெயர்க் குன்றத் துடல்பக வெறிந்த
நெடுவேற் கடவுண் மயிற்கொடி"—(கல்லாடம். 25)

"கடன்மாக் கொன்ற தீப்படர் நெடுவேல்" (கல். 43)

"ஆற்றல்செய், விண்ணகம் புடைத்து நெடுவரை காக்கும்
கொடுஞ்சூர் கொன்ற கூரிய நெடுவேல்" (கல். 87)

"மாவொடுங் கொன்ற மணிநெடுர் திருவேல்" (கல். 11)

"மாவெனக் கவிழ்ந்த, களவுடல் பிளந்த வொளிகெழு
திருவேற் பணிப்பகை யூர்தி" —(கல்லாடம். 61)

"அடன்மாக் கொன்ற நெடுவேற் குமரன்"

"சூர்நிரந்து சுற்றிய மாதபுத்த வேலோய்" (பரிபாடல். 18)

"மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்
"தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்"—(முருகு. 60-1)

"மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப்போர்
வேல்வல்லா னிறனே போல்" (கலித்தொகை. 104)

"அறுமுக னொருவனோர் பெறுமுறை யின்றியு
மிறுமுறை காணு மியல்பினி னன்றே
யஞ்சுடர் நெடுவே லொன்றுநின் முகத்துச்
செங்கடை மழைக்க ணிரண்டா வீத்தது"
—(சிலப்பதிகாரம்-2: 49-52)

"மேல்சடற் கவிழ்முகப் பொரியுடன் மாவு
நெடுங்கடற் பரப்பு மடுத்தொழி லரக்கரு
மென்னுளத் திருளு திடைபுகுந் துடைத்த
மந்திரத் திருவேன் மறங்கெழு மயிலோன்" (கல். 73)

என்பனவற்றால் முருகன் குன்றங்கொன்றதும், மாமுதல் தடிந்ததும், வேலின் பெருமையும் விளங்கவைத்தமை யறிதற்பாலது.

தாமரைச் சேவடி, பவளத் திகழொளி, குன்றியேய்க்கு முடுக்கை என்பன மூன்றும் பண்புவமம் முதலது சினையொடு சினையும்,மற்றவை முதலொடு முதலும், சினையொடு முதலுமாய் வந்தன.

எய்தின்றல் - எய்தியது. ஆல்-அசை

"கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே" —(குறள். 1240)

"இருபாற் பட்ட வொருசிறப் பின்று"

—தொல்-பொருள்-புறத்திணை - 16)

என்று வருவனபோல் கொள்க.

"உலகு, சேவலங்கொடியோன் காப்ப ஏமம் வைகல் எய்தின்று" என முடிக்க.

மெய்ப்பாடு:—பிற பொருளின்கண் தோன்றிய ஆக்கம்பற்றிய வியப்பு. என்னை?

"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே"

—(தொல்-பொருள்-மெய்ப்பாட்டியல். 7)

என்பாராகலின்.

கடவுள் வாழ்த்து முற்றும்

நூல்

1. குறிஞ்சி

தலைவன், தலைவிக்குக் கையுறையாகக் கொண்டுவந்த மலரைத் தோழி ஏற்காது மறுத்தது.

திப்புத் தோளார் பாடியது

1. செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

என்பது தோழி கையுறை மறுத்தது.

இயற்கைப் புணர்ச்சி பெற்ற தலைமகன், தோழியின் வாயிலாகத் தலைமகளின் கூட்டத்தைப் பின்னும் பெறக்கருதித் தான் குறையுற்றிருப்பது தோன்ற, "நும்மால் அருளத் தக்காரை அலையாதே இத் தழை பெற்றுக்கொண்டு என் குறை முடிப்பீர்" எனத் தழையைக் கையுறையாகக் கொண்டு வந்தானாக; தோழி தலைவனை நோக்கி, "இம்மலையில் இத்தழை யரிது; ஆதலால் பிறர் இதனைக் காணின் ஐயுறுவர்; ஆதலின் யாம் இதனை ஏற்றுக்கொள்ளோம்" என்று அக் கையுறையை ஏற்காது மறுத்துக் கூறியது இச் செய்யுள் எனவும்

கூறுவர். பின்னும் வேறாகவும் கூறுவர். அதனை மேற்கோள் விளக்கத்திற் காண்க.

கையுறை—அன்பு பாராட்டிக் கையிற் கொடுக்கும் பொருள்.

செம் களம் பட=போர்க்களம் பகைவரின் இரத்தம் படிதலால் செந்நிறக் களம் ஆகும்படி, அவுணர் கொன்று தேய்த்த=அசுரர்களைக் கொன்று முற்றிலும் ஒழித்த, செம்கோல் அம்பின்=செங்கோலைப் போன்ற அம்பினையும், செம்கோடு யானை=(இரத்தம் தோய்ந்து) செவ்விய தந்தங்களையு முடைய (பிணிமுகம் என்னும் பெயரினை யுடைய) யானையையுமுடைய, கழல் தொடி=வீரக்கழலையும் வீர வாகுவளையத்தையு முடைய, சேஎய் குன்றம்=முருகக் கடவுளைத் தெய்வமாக கொண்ட எமது மலை, குருதிப் பூவின் குலை=இரத்தம்போற் சிவந்த மலர்க் கொத்துக்களைக்கொண்ட, காந்தட்டு=காந்தளை யுடையது.

படுதல்—அழிதல். செங்களம்—செழிய போர்க்களமுமாம்; செம்மை, செழுமையை யுணர்த்திற்று; பண்புத்தொகை அன்மொழி. அம்பின்—இன் ஐந்தன் உருபு, ஒப்புப் பொருளது. கோடு + யானை= கோட்டியானை; நெடிற்றொடர்க் குற்றியலுகர மாதலின் இரட்டித்தது; இகரம் - குற்றியலிகரம்; "யகரம் வரக் குறளுத் திரி யிகரமும், அசைச் சொன் மியாவினிகரமுங்குறிய" என்பாராதலின்.

கழல் தொடி= கழலும் தொடியும் எனில் உம்மைத்தொகை; கழல் தொடி—வினைத்தொகையுமாம். சேஎய்—உயிரளபெடை. சேய்—முருகன். சேஎய்—உவமவாகுபெய ராய்த் தலைவனைக் குறிப்பின் அண்மைவிளி என்க. குருதிப் பூ—உவமத்தொகை. காந்தட்டு—காந்தளையுடையது; குறிப்பு வினைமுற்று; குறுந்தாட்டு என்றாற்போல.

மேற்கோள் விளக்கம்

1. செங்களம்'—"செங்களம் துழவுவோள்" —(புறம் 278-7)
2. "செங்களம்பட...காந்தட்டே" தோல்.-செய் 518சூ.பக். 509)
3. "செங்களம்பட........காந்தட்டே"—இது தோழி தலைவியை இடத்துய்த்து நீங்கியது. —(தொல்—களவு-பக்கம் 515)
4. "செங்களம்பட........காந்தட்டே"—"இஃது அளவடியானும் அகவலோசையானும் வந்த நேரிசை ஆசிரியப்பா. (யா. காரிகை. 66 பக்)
5. "குருதிப் பூவின்"—"தோடார் தோன்றி குருதி பூப்ப" —(முல்லை 96)
6. "இச் செய்யுள் பாங்கி தலைமகளைக் குறியிடத்து வைத்து நீங்கல்" என்பதற்கு மேற்கோள். —(நம்பியகப் பொருள்-ச-பதிப்பு)
7. "குருதிப் பூவின் குலைக்காந்தட்டே"—"காந்தட் குருதி யொண்பூ" —(நற்—34)
8. "செங்களம்பட.........காந்தட்டே" —(இறை- —பக். 140)

அவுணர்—தேவர்களுக்குப் பகைவராய் ஊறு செய்யும் ஓர் வகை மரபினர்.

தேய்த்த என்பது அம்பிற்கே யன்றி உவமையாகவந்த முருகற்கும் அடை மொழியாகும். அஞ்சிப் புறங்கொடுத்தார்மேற் செல்லாமையையும்

அடைக்கலம் புகுந்தாரைக் காத்தலையும் கருதிச் செங்கோலம்பு எனப்பட்டது. பகைவரத் தப்பாது குத்துவதாலும் குருதி தோயப் பெறுதலினலும் செங்கோலம்பு எனப்பட்டது மாகும்.

முருகப்பெருமான் ஊர்ந்து செல்லும் யானைக்குப் பிணிமுகம் என்று பெயர். இதனை, "ஓடாப்பூட்கை பிணிமுகம் வாழ்த்தி"—(முருகு 247).

"சேயுயர் பிணிமுக மூர்ந்தமருழக்கி"—(பரிபாடல் 5)

"பிணிமுக வூர்தியொண் சேயோனும்"—(புறம் 56—8)

என வருவனவற்றாலறிக.

கழல்—வீரர் காலில் அணியும் வீரக்கழல். தொடி—வீரர் கையிலணியும் வாகுவளையம். கழல் தொடி என்பது முக்காலத்திற்கும் பொதுவாக வந்த வினைத் தொகையுமாம்.

"களம் படக் கடந்த கழறொடித் தடக்கை" —(புறம் 612)

"கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்" —(புறம் 128 5)

சேய் அன்னய் என்னது சேஎய் என்றே விளித்தது வள்ளியைக் கள்ளத்தில் கலக்க எண்ணி உள்ளங்கொண்ட முருகனது முயற்சி போன்றதே நினது முயற்சியும் என்ற குறிப்புப் பொருள் உணர்த்தியவாறு.

குருதிப்பூ—உவமத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. 'அம்பின்' 'பூவின்'—இவற்றில் "இன்" சாரியைகள் என்பதூஉம் கொள்க.

"குன்றம் குருதிப் பூவின் குலைக் காந்தட்டு" என்றதனல், தலைமகன் செங்காந்தட் பூவைக் கையுறையாகக் கொண்டு வந்தானக, தோழி, "இம்மலை யிடத்து இது அருமை யுடைய தன்று" என மறுத்ததுமாம். எனவே, "எளிய இதனை ஏலேம்" என்பது குறிப்பு.

"சொல்லொடுங் குறிப்பொடு முடிவு கொளியற்கை

புல்லிய கிளவி எச்ச மாகும்" —(தோல்—பொருள்-செய்-பக்.207)

'சேஎய குன்றம்'—என்பது பிரதிபாடம்.

'சேஎய குன்றம்' என்ற பாடங்கொண்டு, "கழலவிடப்பட்ட தொடியினை யுடைய முருகனை அன்னனது குன்றத்து" என உரை கூறித் தோழி, தலைவி செங்காந்தள் நிறைந்த தோட்டத்தைச் சுட்டிக் காட்டி, "ஆங்குச் செல்க" என்பது தோன்றக் கூறினள் என்பதுமாம். ஆதலின் இறையனாரகப் பொருளுரையிலும், தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினர்க்கினியர் உரையிலும், "தோழி, தலைவியை இடத்துய்த்து நீங்கியது" என்னும் துறைக்கு இச்செய்யுளை உதாரணமாகக் காட்டினர்.

'சேஎய குன்றம்'—இதில் 'அ' சாரியை. 'ஆங்குச் செல்க' என்பது குறிப்பெச்சம். "சொல்லொடும்......எச்சமாகும்"—(தொல்-செய் 207) என்ற சூத்திரத்தினுரையில் இச்செய்யுள் இருதுறைக்கும் பொருந்துமெனப் பேராசிரியர் கருத்துட் கொண்டனர் என்பது அறிக.

'மெய்ப்பாடு'—தோழிக்குச் சூழ்ச்சி பிறந்தது; தலைவற்கு அசைவு பிறந்தது.

பயன்:—கையுறை மறுத்தல்.

ஆராய்ச்சிப் பகுதி-Research

ஆரியர் நாகரிகமும் திராவிடர் நாகரிகமும்

[திரு பா. வே. மாணிக்க நாயக்கர்—
காழி. சிவ. கண்ணுசாமி B. A.]

ஒன்றுடனென்றை ஒப்பிடுதல் பொதுவாக அருவருக்கத் தக்கதாகும்; எனினும், ஒன்றன் உண்மை மேம்பாட்டை உய்த்துணர்தற்கு அவ்வொன்றை வேறு பலவற்றுடன் ஒப்பு நோக்கிச் சீர்தூக்கிப் பார்த்தல் இன்றியமையாததாகும். அதிலும், பண்டைக்கால மக்கள் வரலாறுகளை நுனித்தறிய முயலுங்கால், உண்மையைக் கண்டறிதலே இலக்காதலின், அது கருதி ஒப்பிடுதலைக் கைக்கொள்வதில் எவருக்கும் வெறுப்புத் தோன்றற்கிடமில்லை. இந்தியாவில் "வரலாற்று நூல்கள்" எழுதப்படவில்லை என்பதைப் பெருங்குறையாக வெடுத்துக்கூறிப் பலர் இகழ்ந்துரைக்கின்றனர். அக்குறை, உண்மையை நோக்குமிடத்து, ஒரு பெருங் குறையாகாது. ஒரு நாட்டு வரலாற்றை யெழுத முற்போந்து, காய்தலுவத்தலை யகற்றுமல், பற்றுள்ளங்கொண்டு மனம் போனவாறு ஒருவர் எழுதி வெளியிடுவதனல் உண்மைகள் உருத்தெரியாமல் மாறுபாடடைகின்றனவன்றோ? ஆமாயின், அத்தகைய வரலாறுகளை உண்மை வரலாறுகள் என நம்புவது யாங்ஙனம்? உண்மை திரிந்த ஒன்றை உண்மையெனப் பிறழ உணர்வதிலும் வெறுக்கத்தக்கது வேருென்று முண்டோ? சில வாண்டுகட்கு முன்னிகழ்ந்த உருஷிய ஜப்பானியப் பெரும்போரைக் குறித்து ஜப்பானியர்களும், உருஷியர்களும், ஆங்கிலேயர்களும், ஜெர்மானியர்களும் தத்தமக்குத் தோன்றியவாறு பலபட எழுதிவைத்துள்ளார்கள். இன்னும், ஹம்பி(Humpi)ப் போரைப் பற்றி தக்காணத்து நவாபின் அரசாங்க வரலாற்று நூலாசிரியரான பிரியோதா என்பவர் ஒரு வாலாறு எழுதியுள்ளார்; பேஎஸ் டாமிங்கோ என்பவரும் அதைக் குறித்துப் பல செய்திகளைத் திரட்டி வைத்துள்ளார். ஆ! ஒன்றற்கொன்று எத்துணை மாறுபாடு! இததகைய வரலாற்று நூல்களாற் பயன்யாது?

மொழி தெரிப்பதே உண்மை வரலாறு

இனி, ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தையும், வளர்ச்சியையும் உண்மையில் அறிதற்கு அந்நாட்டினர்தம் மொழியே உற்ற கருவியாகும். என்னை? மக்களின் உள்ளக் கருத்துகள் அவர் தம் மொழியானேயே உருவேற்றுப் பரவுகின்றன; அம் மொழியெனுஞ் சிலம்பில் அவர்தம் கருத்துகளாகிய மாணிக்கப்

பரல்கள் எத்தகைய புனைவுங் கலப்புமின்றி உள்ளவாறே மிளிர்கின்றன ஆதலின்.

எடுத்துக் காட்டுகள்

"பெருமாட்டிகளே, சான்றோர்களே," (Ladies and Gentlemen) என்று விளித்துச் சொற்பொழிவைத் தொடங்குவது தற்போது பெருவழக்காகப் பரவியுள்ளது. இஃது ஆங்கில நடையைப் பின்பற்றியது என்று கூறவேண்டியதில்லை. இதனை ஆங்கிலேயரொழுக்கமுறையில் அவர்கள் மகளிர்க்கு முதன்மையளிக்கும் பெற்றி விளங்குகின்றது. ஆனால், இந்தியர்களோ பெண்மக்களை நிலவறையிற் சிறைவைக்கும் நாகரிகமற்ற மாக்கள் எனக்கண்டித்து ஒதுக்கப்படுகின்றனர். நந்நாட்டில் தற்போது இருக்கும் நிலைமையை நோக்க இக்கண்டனம் ஒருவாறு ஒப்புக்கொள்ளத் தக்கதே. ஆனால், மொழிகள் வெளியிடும் உண்மைகளை யாராய்ந்து பார்த்தால் இக்கண்டனம் எத்துணைத் தவறான தொன்றென்பதும், உண்மைக்கு நேர்மாறானதொன்றென்பதும் எளிதில் விளங்கும். பெருமை தெரிக்கும் "பெருமாட்டி" என்பது ஆங்கிலச் சொல்லான "லேடி" என்பதன் பொருள். "லேடி" என்ற சொல் ஆங்கிலோ சாக்ஸன் மொழியைச் சேர்ந்தது. அச்சொற்கு அம்மொழியில் நேர்பொருள் 'ரொட்டிமாப் பிசைபவள்" என்பதாம். அதன்படி. "லேடி" என்பதன் ஆண்பாற் பெயராகிய "லார்ட்" (Lord) என்ற ஆங்கிலோ சாக்ஸன் சொல் "ரொட்டிமாக் காப்பவன்" என்று பொருள்படும். ரொட்டிமாவைத் தன் கருத்துக்கிசைந்தவாறு தட்டிக் கொட்டி வைப்பதுபோல், தன் கணவனையும் தன் கருத்துக்கிசைந்தவாறு ஆட்டிவைக்கிறாள் என்ற பொருள் "லேடி" என்ற சொற்குப், பின்னர் ஏற்பட்டதாகும். இவ்வுண்மையை நாம் ஆங்கிலேயர்தம் வாழ்க்கை வரலாற்று நூல்களிற் காண்டலரிதாகும். ஆனால் மொழிவரலாறோ சிறிதும் ஒளிமறைவின்றி உள்ளதை உள்ளவாறே விளக்கி விடுகிறது. இஃதிவ்வாறாக, தென்னாட்டு மொழிகளில் மகளிரைக் குறிக்க வழங்கும் சில சொற்களை இவ்வழி ஆராயலாம். அவ்வாராய்ச்சியில் தென்னாட்டுத் திராவிட மக்கள் தம்மகளிரை எத்தகைய உயர் நிலையில் வைத்திருந்தார்களென்பது தெள்ளிதிற் புலப்படும்.

* மனைவி என்ற சொல் மனை அல்லது வீட்டுக்குத் தலைவியென்ற பொருளைப் பயப்பதாகும். "இல்லாளு" என்று தெலு

*மனைவி என்ற பெண்பாற்றமிழ்ச் சொல்லுக்கு மனைவன் என்பது போன்ற நேர் ஆண்பாற் சொல் தமிழில் இல்லாமையும், இல்லாள் என்ற தமிழ்ச் சொல்லின் நேர் ஆண்பாற் சொல்லான இல்லான் என்பது தலைவன் என்று பொருள்படாமல் வேறு பொருள்படுவதும் உய்த்துணர்ந்து மகிழ்தற்பாற்று. கா. சிவ. க.

ங்கில் வழங்கும் சொல்லும் அதே பொருளது. கண்ணாட்டி என்ற மற்றோர் சொல் கண்ணனைய அருமையும் பெருமையும் உடையவள் என்பதையும், துணைவி என்ற வேறொரு சொல் இல்வாழ்க்கைச் சகடத்தை எம்மருங்கும் ஒற்றி உடனீர்க்கும் உதவி புரிபவள் என்பதையும் குறிக்கின்றன. இச்சொற்களும் இவைபோன்ற ஏனைய பிற சொற்களும், திராவிடருடைய நாகரிகத்தில் மகளிர் எத்தகைய மேனிலையில் வைத்துக்கொண்டாடப் பட்டுவந்தார்கள் என்பதை நன்கு தெரிக்கவில்லையோ? ஆனால் இற்றைநாளில், அதிலும் சென்ற மூந்நூறு ஆண்டுகளில், இச்சீரிய நிலை மாறிக் கேடுற்றிலதோ எனின், ஆம் என்றே விடை பகர்தல் வேண்டும். அக்கேடும் இடைப்புகுந்த ஆரியர்தம் நாகரிகத்தினாலேயே தான் என்பது வெள்ளிடை மலை.

பேஅஃட் (bad) என்ற ஆங்கிலச் சொல்லை ஆராய்ந்து அது தெரிக்கும் வான் முறையை நோக்கலாம். ஆங்கிலோ சாக்ஸன் மொழியிலுள்ள "பெஅஃடெல்" (Baddel) என்ற சொல்லிலிருந்து அஃது பெறப்பட்டதாகும். பெஅஃடெல் என்ற அச்சொல் (ஆணுமல்லாத பெண்ணுமல்லாத) பேடி என்று அம்மொழியிற் பொருள்படுவதாகும். (பேடி என்ற சொல்லுக்கும் பெஅஃடெல் என்ற சொல்லுக்கும் உள்ள உற்றுமை வியக்கற்பாலது.) இப்பொழுதோ அச்சொல் கெட்ட, தீய என்ற பொருளையே பயந்து நிற்கிறது. எனவே, அம்மொழிக்குரிய மக்கள் ஒருவன் பேடியல்லாத ஆண் தன்மையுடனிருந்து காமந்துய்க்க வல்லனயிருப்பதே நல்லது என்று கொண்டிருந்தார்கள் என்றும் அஃதேலாமை கெட்டதென்று கருதினார்கள் என்றும் தெரியவில்லையா?

ஆஸ்தி என்ற வடசொல் பொருட் செல்வத்தைக் குறிப்பதாகும். அதன் வேர்ச்சொல்லோ என்றும் அழியாமல் நிலைத்திருப்பது என்று பொருள்படுவதாகும். இதனால், அம்மொழிக்குரிய ஆரியர்கள் நிலையில்லாத செல்வத்தை முதலில் நிலையுள்ளதாகக் கருதி இடர்ப்பட்டனர்; அதாவது, பொருளல்லவற்றைப் பொருளென்றுணர்ந்த மருளுறு காட்சியவராயிருந்தனர் என்பது விளங்கவில்லையா?

செல்வம் என்ற தமிழ்ச் சொல்லோ, எங்கும் நில்லாது மாறி மாறிச் சென்றுகொண்டே இருப்பது என்ற உயர்ந்த உண்மையை உள்ளடக்கி நிற்பதாகும். எனவே, அம்மொழிக்குரிய திராவிடர்கள் உண்மை யியல்புகளைப் பண்டைக் காலத்திலேயே உணரும் ஆற்றல் படைத்திருந்தனர் என்பது எளிதிற் பெறப்படும்.

"ஸ்வபாவ" என்னும் வடசொல் ஒரு பொருளின் தன்மையைக் குறிப்பதாகும். அச்சொல்லுக்கு நேர் ஆங்கிலச் சொல்

நேச்சர் (Nature) என்பது. அச்சொல்லோ "இயற்கையாய்ப் பிறந்தது" என்று பொருள்படும் ஒரு சொல்லிலிருந்து பெறப் பட்டதாகும். இவ்விருதிறச் சொற்களும் "இயற்கை" என்ப தன் இயற்கையை வெளிப்படையாகவோ குறிப்பாகவோ உணர்த் தக் கூடாதனவா யிருக்கின்றன. தமிழ்ச் சொற்களான "இயல்" "இயற்கை" என்ற சொற்கள் இயற்கையின் இயற்கை இடை விடா தியங்குதல் என்பதைத் தாமே வெளிப்படையாகக் குறித்து நிற்கின்றன. அறிவியலுக்கு எப்படியினு மொத்ததான இத்த கைய ஒரு சொல்லை வகுத்துக்கொண்ட திராவிடரின் உயர்தர நாகரிக நிலையை ஐயுறவுங் கூடுமோ?

கள் என்ற பொருளைக் குறிக்கத் தமிழில் எத்தனையோ சொற்களிருக்கின்றன. ஆனால் அவை யெல்லாவற்றின் வேர்ப் பொருளையும் நோக்கினால் திராவிடர்கள் அப்பொருளின் மீது எத்தகைய வெறுப்புக்கொண் டிருந்தார்கள் என்பது நன்கு விளங்கும். தமிழிற் கள் என்பதே தெலுங்கிற் கள்ளு எனப்படு வது. அதன் வேர்ச் சொல்லாகிய கள் என்பது திருடு என்றும் பொருள் தருவது. இதனால் கள் என்ற பொருளை உட்கொள்வ தனால் ஒருவன் தன்னையே திருடிக்கொள்கிறான்; அதாவது தன்னுணர்வையும் அறிவையும் இழக்கிறான், என்ற உயர்ந்த தத் துவப் பொருளை உட்கொண்டிருக்கிறது என்பது வியக்கற்பாற் றன்றோ? கள்ளைக் குறிக்கும் "பிச்சு" என்ற மற்றொரு தமிழ்ச் சொல் "பைத்தியம்" என்ற கோட்ட நிலையைக் குறிப்பதும் உணரற்பாற்று. இதனால், திராவிடர்கள் தம்முடைய சிறந்த நாகரிக முதிர்ச்சியினால் கள்ளை எத்துணை வெறுத்துவந்தார்கள் என்பது தெரியவருகின்றதன்றோ? ஆரியர்களோ அதனை மது அதாவது, (மதியை மயக்கும்) தேன் என்றும், சுராபானம், அதா வது, தேவர்கள் விரும்பிக் குடிப்பது என்றும் புகழ்ந்து போற்றி வந்தார்கள். ஆரியர் நாகரிகத்திற்கும் திராவிடர் நாகரிகத்திற் கும் உள்ள ஏற்ற தாழ்வை இன்னும் விளக்கிக் கூறவேண்டுமோ?

இவைபோன்ற எண்ணற்ற எடுத்துக் காட்டுகளை யடுக்கிக் கூறலாம். வேத வேள்விகளை யியற்றும்போதுங்கூட மதிகெடுக் கும் மதுவை எத்துணை இன்றியமையாததாக ஆரியர்கள் கருதி வந்தார்கள் என்பதை அறிந்தவர்கள் திராவிடர்தம் நாகரிக நிலை அதற்கு நேர்மாறான தூய்மை பொருந்திய தொன்று என்பதைத் தாமே ஒப்புக்கொள்வர்.

இனி, தாம் குடிக்கும் மதுவை "நான்காம் ஜார்ஜ் மன்னர் உவிஸ்கி" என்று பெருமையாகப் பெயரிட்டுக் கூற விரும்பும் மக்கள் குடியை நாடுகிறார்களா? அன்றி கழிபொருள், விலக்கப் பொருள் என்று கள்ளை வெறுத்து ஒதுக்கும் மக்கள் விரும்பு கிறார்களா?

(தொடரும்)

அகத்தியர்

(முகப்புப் படம் பார்க்க)

[*சென்னை மாகாண அரசியன் முறை விளக்கம்-3-ம் தோகுதி]

அகஸ்தியன் சமஸ்கிருதம்; அகத்தியன் தமிழ். வடமொழி அகஸ்தியன் என்பது மலையை யெறிபவன், அதாவது மலைப் பாங்கான நிலங்களிலும் செல்பவன் என்று பொருள்படும்.

1. மனுப்பேரூழியில் திருத்தோணியில் தப்பிப் பிழைத்த ஏழு முனிவர்களில் ஒருவர். சப்தரிஷி மண்டலம் எனப்படும் உடுக்கூட்டத்தின் உச்சியில் இருக்கும் நாண்மீன்; அதனருகில் அவர் மனைவியாகிய அநசூயை என்று மற்றொரு சிறு நாண் மீனும் இருக்கும். சிரஞ்சீவி. அத்திரி என்றும் அழைக்கப் படுவார்; மனைவியின் பெயர் ஆத்ரேயி.

2. வரலாற்று நூற்குரிய உண்மை அகத்தியர் ஒரு மகா முனி. தமிழ் முனி யென்றழைக்கப்படுவார், முதற்பாண்டியனை குலசேகரபாண்டியன் காலத்தவன் என்று கூறுவாருமுண்டு. வட நாட்டு வியாசனுக்குத் தென்றிசையில் ஒப்பானவர். கெனேப் பஸ் (canopus) என்று ஆங்கிலத்திற்கூறும் நாண்மீனுக்குரியவர். குடத்திற்பிறந்த கும்பயோனி என்றுங் கூறுவர். அவர் திபேத்து நாட்டினர்; பார்ப்பனரல்லர். சிறிய உருவம் படைத்தவர். அவர் தம்நெறி பரப்புவதற்காக தென்றிசை வந்தவர். விந்தமலை யின் செருக்கையடக்கி "விந்திய கூடன்" என்று பெயர் பெற் றார் என ஸ்காந்த புராணம் கூறும். விந்தத்திற்குத் தெற்கே வாதாபி இல்வலனை வென்ற நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சி ஸ்காண்டிநேவியா நாட்டு ஓடின் என்பானது கதையை யொத்தி ருக்கிறது. அதன்பின், கன்னியாகுமரி முனைக்குச் சென்று பொதிகைமலை என்ற அகத்தியமலையிற் றங்கினர். அஃது இற்றைப குற்றாலத்திற்கருகி லிருக்கிறது. அம்மலையினுச்சியைச் சேர்தலரிதாகலின் அவ்வுச்சியில் அவர் வதிவதாக இன்றும் மக் கள் நம்புவர். சிவ வழிபாட்டை அவரே தமிழ் மக்களிடை வளர்த்தனர்; மருத்துக் கலை, பொருட்கலவை, வானநூல் முதலிய பலகலைகளையும் கற்பித்தனர். அவருடைய இலக்கணம் 12,000 சூத்திரங்கொண்டது. ஆனால், தொல்காப்பியத்தில் மேற்கோ ளாகக் காணக்கிடைக்கும் இரண்டொன்றைத் தவிர ஏனைய சூத் திரங்கள் கிடைத்தில. அவர் பெயரால் இற்றைநாள் வழங்கும் நூல்கள் யாவுமே அவருடையனவாகா. அவர் மனைவி உலோபா

* Manual of the Administration of the Madras Presidency 1893 Vol III P. P. 9-10.

முத்திரை. அவருக்குச் சாகரன் என ஒரு பிள்ளை யிருந்தான். அவர்தம் மாணவர் பன்னிருவர்:—அதங்கோட்டாசிரியர், அவிநயத்து நயர், இலக்கணமுரைத்த காக்கைப் பாடினியர், கழாரம்பன், நத்தத்தன், தொல்காப்பியப் பாயிர முரைத்த பனம்பாரன், செம்பூட்சேயன், தொல்காப்பியன், துராலிங்கன், வாமன், வையாபிகன், வைப்பியன்.

கா. சிவ. க.

பரங்கிமலை

(Saint Thomas Mount)

தமிழ், பரங்கி+மலை பரங்கிமலை; ஐரோப்பியர் இருக்கும் மலை; வடமொழி பிருங்கிகிரி.; மூன்று கல்களோடு கூடிய பிருங்கி முனிவர் வாழும் மலை. கி. பி. 1759-ல் காலிபாட் என்ற தளகர்த்தருக்கும் வாலி என்பவருக்கும் இவ்விடத்திற் போர் நிகழ்ந்தது. 20-3-1769-ல் ஹைதராலிக்குப் மிஸ்டர் டுபே என்பவருக்கும் இங்கே ஒரு உடன்படிக்கை நிறைவேறிற்று. 1774-ல் இஃது பீரங்கிப்படை நிலையமாக நிறுவப்பட்டது. இங்கேயுள்ள கிறித்து கோவிலின் கட்டிடம் மிகவும் அழகானது. மலையுச்சியில் அர்ச். தோமாஸ் என்பவரிருப்பிடமாகக் கருதப்பட்ட சிலுவைமலை (Mt. cross) என்ற இடத்தில் ஒரு பழைய போர்த்துகேசிய கிறித்துவக் கோவில் கட்டப்பட்டிருக்கிறது.

பிருங்கி கிரி யென்ற வடமொழிப் பெயர்மாற்றம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வடமொழி தமிழ் மொழியைச் சிதைத்துத் தனக்கு ஆக்கந் தேடிக் கொண்டு வரும் சூழ்ச்சி முறைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். ஆரியர்கள் வந்தபிறகுதான் நாடு நாகரிக முற்றது என்று சிலர் கூற முயல்வது எத்தகைய பிதற்றல் என்பதை இது விளக்கும். தமிழ் நாட்டு ஊர்களின் பெயர்களெல்லாம் வடமொழிப் பெயர் கொண்டமை மிகவும் பிற்காலத்தேதான். அவற்றின் பண்டைய பெயர்கள் திராவிட மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு ஆகிய இவைகள் தனித்தனியே பிரிவதற்குமுன் கொடுக்கப் பட்டவையாகவே தோற்றுகின்றன.

திராவிடர்கள், அதாவது தென்னிந்திய மக்கள், உலகத்து மக்கட் பெருங் குழுவினர்களில் ஒரு தனிப்பட்ட பெருங்குழுவினர் என்பதும், ஆரியர்களின் வருகையினால் திராவிட மக்களின் தனிப்பண்பு நலங்களும் பழக்கவழக்க ஒழுக்கமுறைகளும் மிகுதியாக மாறி விடவில்லை என்பதும் குறிக்கொளற் பாற்றும்.

கா. சிவ. க. —சென்னை மாகாண அரசியன்முறை விளக்கம்.

அறிவியற் பகுதி - Science

உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்ரமணியம், எம். ஏ.]

உட்பாட்டியல் (Instinct)

உட்பாடு என்பது ஒரு நுண்ணிய உள்ள எழுச்சி. இது பலவகைப்படும். இது உளத்தின் கண் யாதொரு முயற்சியுமின்றித் தோன்றுவது. இது புறப்பொருள் சார்புபற்றி நிகழும். அவ்வாறு நிகழுஞான்று யாதாமோரு மெய்ப்பாட்டினை உடன் தோற்றுவிக்கும். பின்னர் எச்சார்புபற்றி எழுந்ததோ அச்சார்பினை அடையுமாறு உடலைத் தொழிற்படுத்தும். இதனை ஒரு எடுத்துக்காட்டால் விளக்குவோம். வனத்தின் வழியாகச்செல்வானொருவன் ஒரு வேங்கையைக் கண்ணுறுகின்றான். உடனே சிறிதும் கால இடையீடின்றி அவன் உளத்தே ஒரு உட்பாடு எழுகின்றது. அதன் தன்மையைச் சுட்டியறிய நமக்கு இயல்வதில்லை. அவ்வுட்பாடு அச்சம் என்னும் மெய்ப்பாடாகத் தொடர்ந்த பின்னரே சுட்டறிவுக்கு உட்படுகின்றது. இது இயற்கையின் அமைப்பு. இவ்வாறே ஒவ்வொரு மெய்ப்பாட்டுக்கும் அடிப்படையாக ஒவ்வோரு உட்பாடு உண்டு. தன்னைத் துன்புறுத்தின சிறுவனைக் காணும்போதெல்லாம் பூனைக்கு ஒரு உட்பாடு உண்டாகின்றது. இவ்வுட்பாடு உடனே சினம் என்னும் மெய்ப்பாடாக மாறுகின்றது. ஒரு இளம்பசுவைக் கண்டவுடன் சேங்கன்றுக்கு ஒரு உட்பாடு எழுகின்றது. உடனே அவ்வுட்பாடு காமம் என்னும் மெய்ப்பாடாக மாறுகின்றது. பின்னர் கூட்டுறவுக்குரிய தொழிற்பாடு நிகழ்கின்றது. எனவே புறப்பொருள் சார்பால் முதற்கண் உட்பாடு தோன்றி, அதற்பின் மெய்ப்பாடு எழுச்சியுற்று, அதன் பின்னரே தொழிற்பாடு நிகழ்கின்றது என்பது தேளிவு.

உட்பாட்டு வகைகள்

மாந்தர்க்கு இயல்பாய உட்பாடுகள் மூவகைப்படுவன. அவை முறையே:

1, தற்சார்பின் உட்பாடுகள்,
2. இனச்சார்பின் உட்பாடுகள்,
3. புணர்ச்சிச் சார்பின் உட்பாடுகள், என்பன.

ஆங்கிலத்தில் அவை முறையே

1. ஸெல்ப் இன்ஸ்டிங்ட்ஸ், (Self Instincts)
2. ஹேர்ட் இன்ஸ்டிங்ட்ஸ், (Herd Instincts)
3. ஸெக்ஸ் இன்ஸ்டிங்ட்ஸ், (Sex Instincts)

எனப்பட்டன. இம்மூவகை உட்பாடுகளும் மாந்தர் உளத்தே ஆழ்ந்து ஊன்றி நிற்பன. இவைகளை மும்முதற் பேருட்பாடுகள் எனக்கூறலாம். ஆங்கிலத்தில் இவைகளை தி த்ரி க்ரேட் ப்ரைமரி இன்ஸ்டிங்ட்ஸ் (The Three Great Primary Instincts) என்பர். இம்மூவகை உட்பாடுகளுள் ஒவ்வொன்றும் பலகூட்டு நிலைமைகளைத் தோற்றுவிக்கும். கூட்டு நிலைமை என்பது ஆங்கிலத்தில் காம்ப்ளேக்ஸ் (Complex) எனப்படும். இதனை ஒரு எடுத்துக்காட்டால் விளக்குவோம். வேளாளன் ஒருவன் தொழிற்றன்மைபற்றி வேளாள இனத்துடன் சார்ந்திருப்பான்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான் அறவோர் இனத்துடன் சார்ந்திருப்பான்; அரசியல் கொள்கையான் பொதுஉடைமையாளர் இனத்துடன் சேர்ந்திருப்பான்; ஆகலான் இனச்சார்பின் உட்பாடு ஒன்றேயாயினும், அவ்வுட்பாட்டுக்கு உட்பட்ட மைந்தன் ஒருவன் தொழிற்பற்றியும் கொள்கை பற்றியும் பல இனச்சார்புடையனாக விருப்பன் என்பது தெளிவு. இது பற்றியே, முன்னர், ஒவ்வொரு உட்பாடும் பல கூட்டு நிலைமைகளைத் தோற்றுவிக்கும் என்றது.

சில உளநூற்புலவர்கள் உட்பாடுகளைப் பன்னிரண்டாகப் பிரிக்கின்றனர். இவ்வுட்பாடுகளின் முதிர்ச்சிகளாகிய பன்னிரண்டு மெய்ப்பாடுகளையும் அவர்கள் குறித்திருக்கின்றனர். அவை கீழ் வருவன:—

எண்	(உட்பாடுகள்)	(மெய்ப்பாடுகள்)
1.	ஓட்டம்	அச்சம்
2.	எதிர்ப்பு	சினம்
3.	நீக்கம்	வெறுப்பு
4.	வியப்பு	விந்தை
5.	தன்னுறுதி	இறும்பூது
6.	தன்னிழிவு	சிறுமை
7.	தாய்மை	மென்மை
8.	மக்கட்பேறு வேட்கை	காமம்
9.	உணவூட்டல்	—
10.	இனச்சார்பு விழைவு	—
11.	பொருள் திரட்சி விழைவு	—
12.	ஆக்க விழைவு	—

இறுதியில் கூறப்பட்ட நான்கு உட்பாடுகளுக்கு உரிய மெய்ப்பாடுகளுக்கு ஏற்ற பெயர்கள் ஆங்கிலத்திலாதல் தமிழிலாதல் இல. மேற்கூறப்பட்ட உட்பாடுகளும் மெய்ப்பாடுகளும் ஆங்கிலத்தில் கீழ்வருமாறு பெயர் பெற்றிருக்கின்றன.

No.	Instincts	Emotions
1.	Flight	Fear
2.	Pugnacity	Anger
3.	Repulsion	Disgust
4.	Curiosity	Wonder
5.	Self-assertion	Elation
6.	Self-abasement	Subjection
7.	Parental Instinct	Tenderness
8.	Reproduction	Sex
9.	Feeding	—
10	Gregariousness	—
11.	Acquisition	—
12.	Construction	—

இனி, மேற் கூறப்பட்ட அமைப்பில் (Table) உள்ள சில வற்றை விளக்கும் வழியான் உட்பாட்டின் உண்மைத் தன்மை யைத் தெரிப்போம். உண்மை வீரன் ஒருவன் ஒரு சாலைவழியாகச் செல்லும் பொழுது தன்னெதிரில் எளியாரை வாட்டும் முரடன் ஒருவன் வருவதைக் காண்கின்றான். உடனே சிறிதும் காலவிடையீடின்றி, அம்முரடனைப் புடைக்கவேண்டும் என்னும் உட்பாடு உண்மை வீரன் உளத்தில் எழுகின்றது. இதைத் தான் மேலமைப்பில் எதிர்ப்பு என்றது. இவ்வுட்பாடு விரை வில் சினம் என்னும் மெய்ப்பாடாகத் திரிகின்றது. யாதா மொரு கலையில் பெரும்புலமை பெற்றவன் ஒருவன் அக்கலையறி வுள்ளார் குழுமியுள்ள அவையின் கண் தன் கொள்கைகளைக் கூறும்போது ஒரு திண்ணிய உறுதியுடன் கூற விழைகின்றான்: தன்னுறுதி என்னும் உட்பாடு அவன் உள்ளத்தில் எழுகின்றது; உடனே அது இறும்பூது என்னும் மெய்ப்பாடாக மாறுகின்றது. தன் புலமையின் பெருமையை அறிந்தவனாதலின் அவனை மீறி அவனுள்ளத்தில் தன்னுறுதி என்னும் உட்பாடு எழுகின்றது. ஒரு பெரிய அறவோனைக் காணும் ஆன்ம வறியன் ஒருவன் உளத்தில், அவனைமீறி, தன்னிழிவு என்னும் உட்பாடு எழுகின்றது. பின்னர் அது சிறுமை என்னும் மெய்ப்பாடாகத் திரிகின்றது. சாலையின் வழியாகச் செல்வானொருவன் சேய்மையில் கழைக்கூத்தாடிகள் கூட்டத்தைக் காண்கின்றான். உடனே அவன் உள்ளத்தில் அக் கூத்தாடிகளின் திறமையைக் காணவேண்டும் என்னும் விழைவு எழுகின்றது: வியப்பு என்னும் உட்பாட்டுக்கு அவன் உட்படுகின்றான். பின்னரே அவன் விந்தை என்னும் மெய்ப்பாட்டினை நுகர்கின்றான்.

இனி, யாம் தொடக்கத்திற் கூறிய மும்முதற் பேருட் பாடுகளுக்கும், பின்னர் பேசப்பட்ட பன்னிரு உட்பாடுகளுக்கும் உள்ள இயைபு யாதென ஆராய்வோம். மும் முதற் பேருட் பாடுகளுள் ஒவ்வொன்றும் சில பல கூட்டு நிலைமைகளைத் தோற்றுவிக்கும் என்று முன்னர் கூறினோம். அக்கூட்டு நிலைமை வகைகளாவன:

1. தற்சார்புக் கூட்டு நிலைமை
2. இனச்சார்புக் கூட்டு நிலைமை
3. புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமை

என்பன. அவை ஆங்கிலத்தில் முறையே,

1. ஈகோ காம்ப்ளேக்ஸ் (Ego-Complex)
2. ஹேர்ட் காம்ப்ளேக்ஸ் (Herd Complex)
3. ஸேக்ஸ் காம்ப்ளேக்ஸ் (Sex Complex)

எனப்படுவன. தன்னுறுதி என்னும் உட்பாடும், தன்னிழிவு என்னும் உட்பாடும் தற்சார்புக் கூட்டு நிலைமைக்கு இயைந்தன. இனச்சார்பு விழைவு என்னும் உட்பாடு இனச்சார்புக் கூட்டு நிலைமைக்கு இயைந்தது. தாய்மை என்னும் உட்பாடும் மக்கட் பேறு வேட்கை என்னும் உட்பாடும் புணர்ச்சிச்சார்புக் கூட்டு நிலைமைக்கு இயைந்தன. மற்ற ஏழு உட்பாடுகளும் பொது வாகத் தற்சார்புக் கூட்டு நிலைமைக்கு இயைந்தனவே. என்னெனில், அவ்வேழில் உணவூட்டல் என்னும் உட்பாடு உடல் வன்மைக்கு இன்றியமையாதது; ஒட்டமும் எதிர்ப்பும் தற்காப் புக்கு இன்றியமையாதன; நீக்கமும் வியப்பும் உள்ள நன்னிலைமைக்கு இன்றியமையாதன; பொருள் திரட்சி விழைவு ஒருவனுடைய இனவாழ்வுக்கு இன்றியமையாதது; ஆக்க விழைவு உடற்காப்புக்கும் பொருள் காப்புக்கும் இன்றியமையாதது. பன்னிரண்டு உட்பாடுகளுள் தற்சார்புக் கூட்டு நிலைமைக்கு உரியன ஒன்பது. அவைகளைக் கீழ்வரும் அமைப்பால் விளக்கலாம்.

தற்சார்புக் கூட்டு நிலைமை

எதிர்ப்பு
வியப்பு
தன்னுறுதி
ஆக்க விழைவு
உணவூட்டல்-பொருள் திரட்சி விழைவு
தன்னிழிவு
நீக்கம்
ஓட்டம்

மேற் கூறப்பட்ட கூட்டு நிலைமைகள் மூன்றும் ஒன்றற் கொன்று முரண்பட்டு இயங்குவன. எவன் ஒருவன் உளத்தே அவை முரண்பாடின்றி இயங்குகின்றனவோ அவன் அறத்தாற்றின் ஒழுகுவானாவன். இம்முப்பெருங் கூட்டு நிலைமைகளைப் பற்றிச் சில புகல்வோம். முதற்கண் தற்சார்புக் கூட்டு நிலைமையைப்பற்றிக் கூறுவோம்.

(தொடரும்)

பொருணூல்—(Economics)

[திரு. B. நடராஜ பிள்ளை B.A. (Hons)]

(முன் சகூகூ-ம் பக்கத் தொடர்ச்சி)

V

நாணயச் சட்டம்

இது இவ்வாறிருக்க, அத்தருணத்தில் தம்முடைய நாணயத் திட்டத்தை நிலைப்படுத்த ஆதாரமாக பொன்னைத் திரட்டிக் கொண்டிருக்கும் ஆங்கில அரசாங்க பாங்கிக்கு (Bank of England) தக்க வேளையிற் பொன் வந்தது சற்று தொக்கான தொன்றாகவே இருந்திருக்க வேண்டுமென்று கூறிச் செல்லலாம்.

இங்கிலாந்து தேசம் 1816-ல் பொன் நிலையைக் கைக்கொண்டது. இதனால் எல்லாக் காகித நோட்டுகளுக்கு நேராகவும் பொன் கொடுத்தல் வேண்டுமென்று ஏற்படுவதால் தக்க தங்க ஆதாரத்தைத் திரட்ட ஆங்கில அரசாங்க பாங்கியால் எல்லாவித முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன. எனவே அவர்களுடைய அரசாங்கம் பொன் எடுத்துவர கீழ இந்தியக் கம்பெனியாருக்குச் சிறப்பான சில வசதிகள் செய்து கொடுத்ததும் இயல்பே. இந்தச் செய்கை இந்திய நாணயத் திட்டத்தையும் பாதித்தது. தங்கத்தின் விலை யுயர்ந்தது. தங்க மோகர் என்ற நாணயம் 16 ரூபாயிலிருந்து 18 ரூபாய்க்கு உயர்ந்தது. இது இந்தியப் பழைய நாணயத் திட்டத்தை அடியோடு ஆட்டிவிட்டது. இந்திய நாணய முறையை ஒரு புது வழியில் ஏற்பாடு செய்வது இன்றியமையாதாகிவிட்டது. ஆங்கில நாட்டைப் போல் பொன் நிலை நிறுவுவது இந்தியாவுக்கு ஏற்றதன்றெனக் கொள்ளப்பட்டது. ஹார்ஸிலி பாமர் என்ற ஆங்கில பாங்கியின் அதிகாரி கவர்னரானவர் 1832-ல் பொது மக்கள் சபைக் குழுவின் முன்பு (House of commons' Committee) சாட்சியம் கொடுக்கையிற் பின்வருமாறு கூறினர்:—

"இந்தியாவில் தங்க நாணயம் வழக்காற்றில் இருப்பதில்லை, பெரு அளவில் இருக்கப்போவதுமில்லை; வெள்ளியே அங்குள்ள மெய்யான நாணயம்; அதுவே பெரும்பாலோராலும் வழங்கி வரப்படுவது......தங்கத்தை நாடோடியாகப் புழங்கி வரும் நாணயமாக ஏற்படுத்துவதென்ற அபிப்பிராயத்தை நான் முற்றிலும் எதிர்க்கின்றேன்."

அதன்படியே 1835-ல் பொன் வெள்ளி என்ற இரு உலோகங்களின் ஆதரவில் இயங்கிக் கொண்டிருந்த இந்திய நாணயத்

திட்டத்தைத் திருத்தி வெள்ளி நிலே ஏற்படுத்தப்பட்டது. வழக்கிலிருந்துவந்த பல வேறு ரூபாய்கள் ஒழிக்கப்பட்டு ஆர்க்காட்டு ரூபாயே 1835-ம் ஆண்டு XVII வது சட்டப்படிக்கு முத்திரை ரூபாயென ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சட்டமானது அது முதற்கொண்டு தங்க நாணயம் பிரிட்டிஷ் இந்தியாவில் செல்லுபடி யாகாதென்று கண்டபடியால், அது வரையில் நாட்டின் கண்ணே ஆட்சியி லிருந்துவந்த எல்லாப் பொன் நாணயங்களேயும் செல்லாக் காசாக்கித் தீர்த்தது. ஆனல், வட சர்க்கார்ப்பிரதேசங்களில் தவிர பிறிதிடங்களிலிருந்த தங்க நாணயத்தின் பெரும்பாகமும் வழக்கிழந்து புதைக்கப்பட்டோ அன்றி அயல் நாடுகளுக் கனுப்பப்பட்டோ அதற்குள்ளேயே மறைந்துவிட்டது என்பது மெய்யே. ஆர்க்காட்டு ரூபாயை முத்திரை ரூபாயாக அங்கீகரித்ததன் பயனுக அரசாங்கத்தார் அது காறும் நாட்டிலிருந்த பல வேறு நாணயங்களாலுண்டான குழப்ப மொழித்து, நிலேயான ஒரு நாணயத் திட்டத்துக்கு அடிகோலினர். ஆனல் கைம்மேல் உண்டான பலன்கள் நன்மை தரத் தக்கனவா யிருக்கவில்லே. பொற் காசுகளேச் செல்லாக் காசுகளாக்கியதாலும், பல வேறுவித வெண் காசுகளே வழக்கிலிருந்து அகற்றியதாலும், நாட்டில் ஆட்சியிலிருந்த நாணயத்தினளவு திடீரெனச் சுருங்கிற்று. இது விலேகள் பின்னும் குறைவதற்குக் காரணமாயிருந்தது. 1835-ம் ஆண்டுச் சட்டத்தைக் குறித்து ஸர். ஜே. வி. கோயாஜி என்னும் அறிஞர், 'நாணய ஒற்றுமைச் சீர்திருத்தம் இறுதியில் நன்மையளித்ததே யாயினும், முதலிற் பெருவாரியான மக்களுக்கு அளவற்ற துன்பத்தை யளித்தது. எங்ஙனமெனில் பல்வேறு கள்ள நாணயங்களே ஆட்சியிலிருந்து அகற்றியதன் பயனுக சிறிது காலத்திற்கெல்லாம் புழங்கி வந்த நாணயத்தின் ெறுகை குறைந்து பண்டங்களின் விலேயில் பெருஞ் சீர்கேடு உண்டாயது'' என்று கூறுகின்றூர்.

அளவற்ற நாணய வகைகள் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டதுமேயன்றி, பிரிட்டிஷ் ஆதிக்கத்துட்போந்த சுதேசி மன்னர்களும் ஜமீன்தார்களும் தங்களது நாணய உரிமை இழக்க வேண்டியதாயிற்று. அதனுல் அதுவரை ஆங்காங்கு எழும் தேவைகளுக்குத் தக்கவாறு நாணயங்கள் ஆக்குவித்த பல கம்பட்ட சாலேகள் ஒன்றுபோல் மூடப்பட்டன. உடையார்பாளேயம் சிவகங்கை போன்ற ஜமீன்களுங்கூட தமக்குச் சொந்தமான கம்பட்டசாலேகள் வைத்துக்கொண் டிருந்தனரென்று அறிகிறேம்.

1835-ம் ஆண்டு சட்டத்தாலெழுந்த நாணய முடக்கத்தைக் காகித நாணயங்களால் ஒழிக்கலாமென்றுலோ அதுவும் இயலாது போயிற்று. ஏனெனில் அப்பொழுதிருந்த சென்னே பாங்

கிக்கு (Madras Bank) காகித பாங்கி நோட்டுகள் அச்சிட உரிமையளிக்கப்பட் டிருந்ததெனினும் அந்த உரிமையானது நோட்டிற்கு வேண்டும் தங்க ஆதாரத்தினளவு முதலிய பற்பல நிபந்தனைகளால் கண்டுண்டதாகவே அதிகப் பயன்படாதாயிற்று. 1838-ல் வெளியிடக்கூடும் நோட்டின் ஏற்றத்தொகை வரையறுக்கப்பட்டதுமன்றி, எக்காரணங் கொண்டும் அந்தத் தொகையை மீறுவதினின்றும் பாங்கி கண்டிப்பாய்த் தடை செய்யப்பட்டது. இவ்வாறாக நாட்டின் நாணயத் தேவைகளைக் கவனியாது வெளியிடப்படும் நோட்டினளவு சற்றும் நெகிழ்ச்சியில்லா முறையில் வகுக்கப்பட்டிருந்தது. 1840-ல் ஸி. ஆர். காட்டன் என்பவர் அரசாங்கத்தார் கைக்கு அடங்கினதாய்த் தேவைக்குத்தக்க நெகிழ்வு கொள்ளும் ஒரு காகித நாணயத்திட்டம் இன்றியமையாதென அறிக்கை செய்தனர். ஆனால் அந்த விவாதம் 1860-வரை எழுப்பப்படவே இல்லை.

அன்றி அவ்வாறு அதிகமாகக் காகித நாணயங்கள் வெளியிட்டிருந்தாலும் அப்பொழுதிருந்த சீர்கேட்டினை அறவே ஒழித்திருக்குமென்பதை உறுதியாகக் கூறுவதற்கில்லை. கம்பட்ட சாலையில் பொறிக்கப்படும் நாணயத்தினளவு எவ்வளவாயிருப்பினும் அந்த நாணயங்களெல்லாம் பொது மக்களின் கையிற் போனாலன்றி, விலைவாசியில் எவ்வித மாறுதலும் எழாது. நாம் பார்வையிடும் கால அளவையில் கம்பெனியாரின் வியாபார முறையாலும், கம்பெனியின் இங்கிலாந்துத் தலைவர்களின் பில் புழக்க முறையாலும் இந்திய வியாபாரத்தின் சார்பாக வரவேண்டும் பணம் முழுதும் இவண் வந்திலது; அதனோடு கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் மராமத்து நடத்தல், நீர்ப்பாசனம் சமைத்தல் பெருவழிகள் அமைத்தல் ஆகிய துறைகளில் தக்கவாறு பணஞ் செலவு செய்யாது சிக்கனமான முறையைக் கைக்கொண் டிருந்தமையாலும், மாகாணத்தின் வெவ்வேறு பாகங்களி லமைக்கப்பட்டிருந்த கம்பெனிக்குச் சொந்தமான நெசவுத்தொழில் நிலயங்கள் நிறுத்தப்பட்டதாலும், நாட்டில் அடிக்கப்பட்ட நாணயம் முழுதும் ஆட்சியிற் புகுதவில்லை. நாணயத்தின் மொத்தப் பெறுமானம் 4 கோடி ரூபாய்க்கிருந்திடினும் அரைப் பாகத்துக்குமேல் அரசாங்கக் கருவூலங்களில் பூட்டி வைக்கப்பட் டிருந்ததென்று சென்னை கம்பட்டசாலைக் குழுவினர் (Madras Mint Committee) மதித்திருக்கின்றனர்.

இவ்வாறாக் இந்தியாவில் மேற்குறித்த கால அளவில் பொன்னும் வெள்ளியும் வெளிநாடு போனதாலும், 1835-ம் ஆண்டுச் சட்டம் வந்து புழங்கிவந்த நாணயத்தின் அளவினைக் குறைத்ததாலும், பணத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

(தொடரும்)

மாணவர் பகுதி

உலக அறிவின் பயன்

[வித்துவான் மு. சண்முகதேசிகர், சீகாழி]

ஆர்கலியாற் சூழப்பட்ட அழகிய இவ்வுலகின்கண் இழிவான பலபிறவிகளை விடுத்து, மனிதப் பிறவியை ஏற்பதே, அரிது! அரிது! என்று ஆன்றோர் கூறியுள்ளார். அப்படிப்பட்ட அரிய மானுடப் பிறவி வாய்த்தும், பகுத்தறிவு இல்லாவிடின் அவர்கள் எடுத்த பிறவியினால் பயன் இன்று. அவ்வறிவு இன்றேல், அவர்களை ஐயறிவு பெற்ற விலங்குகளென்றே விளம்ப வேண்டும். இதனை

"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

என்ற திருவள்ளுவரின் வாக்கு வலியுறுத்தும்.

கொடிய பிராணிகளை மனிதன் அடக்கி ஆளுவதும் அறிவினால்தான் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஒரு மனிதனுக்கு அறிவு ஒன்று மாத்திரம் அமைந்திருந்தால் இவ்வுலகில் சுகமாய் இருந்து வாழமுடியுமா? வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாத பொருள் முதலிய துணைக்கருவிகள் வேண்டாவோ ? என்று வினவலாம். அவ்வினாவிற்கு விடை நமது பொய்யா மொழியாகிய நாயனார் அருளிய குறளிற் கண்டு களிக்கலாம்.

அறிவுடையோர் அல்கிய செல்வத்தவராயினும் அவர் யாவராலும் நன்கு மதிக்கப் பெறுவதுடன், என்றும் அழியாப் புகழையும் ஏற்றுச் சுகமுடன் வாழ்வார். அறிவில்லாதவர் எத்துணைச் செல்வத்தை ஏற்றிருந்தாலும், அச்செல்வத்தை இன்னவழியிற் செலவிடவேண்டும் இன்னவழியிற் செலவிடக்கூடாது என்ற நியதி இன்றி, மனம் போன வாறெல்லாம் செலவு செய்துவிட்டு, உண்ணுவதற்கும் வழியின்றி, வறியர் போல் வருந்துவார்கள். இக்கருத்தினைத் திருவள்ளுவனார்

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

என அருளியுள்ளார்.

அறிவு என்பது பலவகைப் பட்டதாகும். அவைகளை எல்லாம் ஒருவன் அடைவ தென்றால் ஆகாத காரியம். ஆயினும், ஒவ்வொரு செயலில் ஒவ்வொருவர் தேர்ந்த அறிவுடையவராக இருப்பார்கள். இருந்தாலும், உலக அறிவையாவது தெரிந்து கொண்டிருக்க வேண்டும். தேசசஞ்சாரஞ் செய்தலால் உலக அறிவு ஏற்படும். கல்வி கற்றவர்கள் தேசசஞ்சாரம் செய்வதுதான் சிறப்புடைத்து. கல்வி கற்காதவர்களின் தேச சஞ்சாரம் சிறப்புடைத்தன்று.

இக்காலத்து, ஐரோப்பா, அமெரிக்கா, முதலிய நாடுகளிலுள்ள கலாசாலைகளில், மாணவர்களைப் பெரிய பட்டணங்களுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள பொருள்களைக் காட்டி, அப்பொருள்களின் உற்பத்தி, கிடைக்கும் இடம், அவற்றின் உபயோகம் முதலியவற்றைத் தெரிவித்து வருகின்றார்கள். இச் செயலால் அம்மாணவர்களுக்கு அறிவு உண்டாகும். இதனால் இவ்வுலகத்தைப் பலவித பாடங்களையுடைய புத்தகமென்றே கூறலாம்.

முற்காலத்தில் தமிழ் மக்கள் மணம்புரிந்து கொண்டதன் பின்பும் அதற்கு முன்பும் பிறநாடுகளுக்குச் சென்று மூன்று வருடங்களுக்கு மேற்படாமல் இருந்து பலவகையான கலைகளிலும் பயின்று வருதல் வழக்கமாயிருந்தது. அதனால் அக் காலத்தில் தமிழ்நாடானது சீருஞ் சிறப்பு முற்றிருந்தது, என்ற செய்தியை, நம் பழைய இலக்கணங்களுள் ஒன்றாகிய தொல்காப்பியத்திலும் நடை நூல்களிலும் அறியலாம். அது,

"ஓதற்பிரிவுடைத்து ஒருமூன்று யாண்டே"

என்பதாலும், அகப்பொருட்டுறைகளுள் கல்வியின் நிமித்தம் தலைவன் பிரிதல், என்ற ஒரு துறை உளது ஆதலாலும் விளங்குகின்றது. இதனை, "கல்விக் ககல்வர் செல்வத்தவரெனச் செறிகுழற் பாங்கிக்கு அறிவறிவித்தது" என்பதாலும் அறியலாம்.

அரிய நூல்களையெல்லாம் ஐயந்திரிபறக் கற்றிருப்பினும் பல்வேறு நாடுகளில் வசிக்கும் மக்களின் தன்மை, மதம், பழக்க வழக்கம், அரசியல், முதலானவற்றைத் தெரிந்து கொள்ளாதிருப்பவர்கள் அறிவுள்ளவர்கள் என்று கருதப்படமாட்டார்கள். இக்கருத்தினை,

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

என்று நாயனார் நவின்றுள்ளார். ஔவை யென்னும் மூதாட்டியும் "உலகத்தோடொத்துவாழ்" என்றும் கூறியுள்ளார்.

ஒருவனுக்கு, அநேக நூல்களைப் படித்தலாலும், பிறர் செய்கின்ற காரியத்தை நேரிற் காண்டலாலும், பிறர் கூறுகின்றவற்

றைக் கேட்டலாலும், அயல் நாடுகளுக்குச் செல்லுவதாலும் அறிவுண்டாகும்.

தேச சஞ்சாரஞ் செய்வதால் ஒவ்வோர் நாட்டின் தன்மையையும், அங்குள்ளோரின் நாகரிகங்களையும், அவர்கள் பேசும் பாஷைகளையும், அங்கு விளைகின்ற பொருள்களையும், அவர்கள் உணவு, உடுக்கும் ஆடை, நடை நொடி பாவனைகளையும் மற்றைய யாவையும் நாம் தெரிந்து கொள்வோம். அதனின்றும் அறிவு மேன்மேலும் விருத்தியடையும்.

உலக அறிவு இல்லாதவர்கள், தங்கள் கல்வியையும் பெருமையையும், நன்மதிப்பையும், இழந்துவிடுவார்கள் என்பதற்குக் ''கற்றறிமூடர்''களது வரலாறே சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பிறபாஷைகளைக் கற்பதும் உலக அறிவைப் பெறுதற்குச் சாதனமாகும் என மேலே கூறப்பட்டது. பிற பாஷைகளைக் கற்காமலிருந்தோர்கள், சில காலத்தில் வருந்தினர் என்பது, நமது குமாரகுருபரரின் சரிதத்தை உற்று நோக்கின் புலப்படும். ஓர் அமயம் குமர குருபர சுவாமிகள் தலயாத்திரையின்பொருட்டு அநேக நாடுகளுக்குச் சென்று, ஆங்காங்குள்ள திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள மாதொரு பாகனை மனமாரப் போற்றி வணங்கிக் கடைசியில் காசி யென்னும் மாசிலாத் தலத்தினை அடைந்தார். அந்நாட்டினை பாதுஷா என்ற முகம்மதிய அரசன் அரசாட்சி செய்து வந்தான். அவனைக் காணும் பொருட்டு குமர குருபரர் அவனது அரண்மனை வாயிலை அண்மினர். அதைக்கண்ட காவலாளர்கள் இவரை உள்ளே புகவிடாது தடைசெய்தனர். அவர்கள் பேசுகின்ற பாஷையும் இவருக்கு விளங்கவில்லை. அதற்காக மிகவருந்திப் பின் கலைமகளின் அருளால் அப்பாஷையைக் கற்றுக் கொண்டு, உயிர்ச் சிம்மத்தின் முதுகில் ஏறிக் கொண்டு, பாதுஷாவின் முன்சென்று, அநேக வாதங்கள் செய்து சன்மானங்களைப் பெற்றுப் புகழுற்றனர்.

ஐம்பெருங் காவியத்துள் ஒன்றாகிய மணிமேகலையில், ஆதிரையின் கணவனாகிய சாதுவன் என்பான் வாணிகத்தின் பொருட்டு அயல் நாட்டிற்குச் செல்ல விரும்பிக் கப்பலேறிச் சென்றனன். கடலின் நடுவிடத்திற்குச் சென்றதும் அக்கப்பலானது தெய்வாதீனமாய்க் கவிழ்ந்து விட்டது. அதில் உள்ளோரும் அவதிப்பட்டனர். நம் சாதுவனும் வருந்திப் பக்கத்தில் மிதந்து கொண்டிருந்த கட்டையைப் பிடித்துக்கொண்டு ஒரு கரையை அணுகினன். அணுகி உட்செல்லுகையில் அங்கு ஒருவன், எலும்பே ஆதனமாகவும், நரிகள் யாவும் ஏவல் செய்யவும், கோரமான உருவத்துடன் அமர்ந்திருப்பதைக் கண்டு மெய் நடுங்கி நிற்கையில், இரண்டுபேர் வந்து இவனை அழைத்துக்

கொண்டு சென்று அவனிடம் விட்டனர். அவன் நாக நாட்டிற்கு அரசன். கலம் கவிழ்தலால் கஷ்டப்பட்டுக் கரை சேர்வோரைக் கொன்று தின்பது அவன் வேலை. அதுபோல் இவனையும் கொன்று தின்னவேண்டும் என்று அவனது பாஷையில் சொன்னான். ஆதிரை கணவனுக்கு அப்பாஷை தெரியுமாதலால், இவனும் அவனுடன் சிறிது அப் பாஷையிலேயே பேசினன். உடனே அவன் இவன் நமது பாஷையைப் பேசுவதால் நம்மவனே ஆகும் என்று சொல்லிக் கொல்லாது விடுத்தனன்; கொலைத் தொழிலையும் நீக்கிவிட்டான். இதற்கெல்லாம் அப்பாஷை தெரிந்திருந்ததே காரணமாகும்.

இரண்டு மகளிர்கள் வாசனைப் பொடி யொன்றைச் சேகரித்தனர். அப்பொடியின் மணத்தின் நிமித்தம் இருவரும் பூசலிட்டனர். இப்பூசலை நீக்கிக் கொள்வதற்காகத் தாங்கள் இருவரும் சீவகனிடத்து வந்து முறையிட்டனர். அவன் இம் மாறுபாட்டை எப்படி நீக்குவது என்று சிறிது நேரம் ஆலோசனை செய்து, வண்டுகள் ஒலிக்கும் ஒலியானது தெரிந்திருந்ததால் வண்டுகளின் முன் அப்பொடியை அள்ளித் தூவினன். அப்போது வண்டுகள் வாசனையுள்ள பொடியையே நாடிச் சென்றன. அதைக் கண்டு சீவகன் அப்பெண்களின் மாறுபாட்டை நீக்கினன்.

இக்காலத்து நினைத்த மாத்திரத்தில் மற்றோரிடத்திற்குப் போவதற்கு ஆகாயவிமானம் உதவுதல்போலவே, அக்காலத்தும் இதைப் போன்ற ஒரு இயந்திரம் உதவிவந்தது என்பதற்குச் சில சான்றுகள் உண்டு. சச்சந்தன் என்னும் மன்னன் தனது அரசாட்சியைக் கட்டியங்காரனிடம் ஒப்புவித்து விட்டுத் தான் காமவயத்தனாய்க் காலங்கழித்து வந்தனன். சிறிது காலம் சென்றபின் அக்கட்டியங்காரனே இவனிடத்துப்போர் செய்யப் படைகளுடன் வந்து விட்டான். அப்பொழுது சச்சந்தன் மனைவி விஜய மாதேவி கருவுற்றிருந்தனள். மன்னன் அவளை அழைத்து யான் இச்சண்டையில் இறந்து போவது நிச்சயம். நீ இம்மயிற் பொறியில் ஏறிக்கொண்டு எங்கேயாவது சென்று உயிர் தப்புவாய் என்று சொல்லி அவ் இயந்திரத்தினை இயக்குவதற்கும் சொல்லிக் கொடுத்து அனுப்பினான்.

நம் முன்னோர்கள் எல்லாவற்றிலும் தேர்ச்சியுற்று விளங்கி வந்ததுபோலவே நாமும் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். உலக அறிவு தெரிந்திருந்தால், பிற உயிர்களைக் காப்பாற்றுவதற்கும், தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்கும், பெருமையைச் சம்பாதித்துக் கொள்வதற்கும் பிறரால் நன்கு மதிக்கப்படுதற்கும் உபயோகமாகும்.

கவின்கலைப் பகுதி:

Fine arts

மகேந்திரவர்மன் வடமொழியில் இயற்றிய

மத்த விலாசம்

களிக்கூத்து

[ஸ்ரீமான் தி. கு. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள்]

(முன் சஎஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் களம்

காஞ்சியின் மற்றொரு தெரு.

கபா:—இக்காஞ்சீபுரம் என்ன உன்னதம்! ஒப்பு உவமை இல்லாத உயர்திரு நகரம்! அதன் பேரிகை முழக்கம் ஒரு பாலும் சேணோங்கிய கோபுரத்தைச் சென்றடைந்த முகிற்கூட்ட முழக்கம் மற்றொரு பாலும், என்ன! எங்கணும் முழக்கம்! வசந்த காலமே வந்துற்றதென ஐயுறும்படி மலர்மாலை செறிந்து பொலியும் கண் கவரும் கடைகள் நிறைந்தது இவ்வூர். மதிமுகமடவார்கள் இடை பிறங்கும் மேகலையின் ஒலி, காதற் கடவுளாம் மன்மதன் ஜெயித்தான் ஜெயித்தான் என்று முழங்குவதுபோலிருக்கிறது.

தேவ:—ஐயா! காஞ்சீபுரம், வாருணிதேவி மாதிரி அவ்வளவு அழகாயிருக்குது!

கபா:—பிரியே! அதோ அங்கே பார். அந்த கள்ளுக்கடை யாகசாலைபோல் விளங்குகின்றது. கடைப்பெயரெழுதியுள்ள கம்பமே யூபஸ்தம்பம். அங்கு விற்கும் கள்ளே சோமபானம். அங்கிருக்கும் குடியர்களே புரோகிதர்கள். அவர்கள் குடிக்கும் கலயமே சோமபாத்திரம். அவர்கள் நெருப்பிலிட்டு வாட்டிய ஊனே அவிசு. அவர்கள் வெறியில் பேசும் பேச்சே யஜுர் மந்திரங்கள். அவர்கள் போதையில் பாடும் பாட்டே சாமகானம். அவர்கள் கள்முகக்கும் அகப்பையே நெய் வார்க்கும் தர்வி. அவர்களுக்குக் குடி வேட்கையே யாகாக்கினி; கடை முதலாளியே எஜமானன்.

தேவ:—ஆமாம். நம்ம இங்கே வாங்கற பிச்சையே ருத்திரன் பங்கு.

கபா:—ஆஹா! அக்குடியர்களின் களிக்கூத்து எவ்வளவு சிருங்காரம்! தம்பட்டங்கள் ஒருபுறம் அடிக்கவும் அதற்குத்தக அவர்கள் ஆடுவதும் பாடுவதும் மேல் கலே சரிவதும், அதைப் பிடித்துக் கொள்ளும்போது தாளம் தவறுவதும் அவர்கள் கழுத்தின் மாலே கசங்குவதும் என்ன அழகு!

தேவ:—ஓ! ஒங்க அழகு வருணனே ஒயுங்கா இருக்குதே!

கபா:—அம்மதுவாம் வாருணி தேவியைக் கலத்தில் பெய்தவுடன் அணிகளேன்? ஆபரணங்கள் தாம் ஏன்? அதுவல்லவோ காதலர் ஊடல் தீர்க்கும் அருமருந்து? இளம் காளேயர்க்கு ஆற்றலளிப்பதும் அதுவே. மேலும் எவ்விதமான இன்பத்திற்கும் அது உயிர் போன்றது.

ஈசனர் கண்ணில் வெந்தான் அநங்கவேள் எனவே நூலோர்
பேசிய உரையும் பொய்யே பெய்தருதைலம் போல
தேசிகன் உருகி மேனி திரிந்து நம்மிதயம் தன்னில்
ஆசையாய் ஒழுகி நின்ருன் எனக்கொளல் அமைவதாமே. (8)

தேவ:—ஆமா ஐயா! நீ சொல்ரத்தான் சரி. உலகத்துக்குக் கடவுளான சிவன் அந்த மாதிரி செஞ்சிருக்கவே மாட்டான். (இருவரும் வாயில் காற்றடைத்து கன்னத்தைக் கைகளால் அறைந்து மிருதங்க ஒலிபோல் ஒலி எழுப்பி);

கபா:—தாயே! பிச்சை! தாயே! பிச்சை!

[நாடகமேடை உள்ளிருந்து]

'யாரப்பா' பிச்சை! இதோ வாங்கிக்கொள்!

கபா:—வாங்கிக்கொள்கிறேன்—பெண்ணே! என் கபாலம் எங்கே?

தேவ.—நான் பார்க்கலயே.

கபா:—(சிறிது சிந்தித்து) ஆ! அக்கள்ளுக்கடையில்வைத்து மறந்து வந்தோம் போலும்! நல்லது, வா, மீண்டும் போய்ப்பார்க்கலாம்.

தேவ:—ஆனல் ஐயா! இட்ட பிச்சையை வாங்காமெ போலாமா? போனு பாவமுணு சொல்லுவாங்களே. இப்போ என்ன செய்ரது?

கபா:—ஆபத்துக்குப் பாவ மில்லே. நீ வைத்திருக்கும் மாட்டுக் கொம்பில் வாங்கிக்கொள்.

தேவ:—அப்படியே ஐய்யா! (அவள் வாங்கிக் கொள்ள இருவரும் கபாலத்தைத் தேடிப் போகிருர்கள்)

இரண்டாம் களம் முற்றும்.

மூன்ரும் களம்

காஞ்சியில் கள்ளுக்கடையின் பக்கம்

கபா:—ஐயோ! கபாலத்தை இங்கேயும் காணேமே! (பரபரப்புடன்)

ஓ! மாகேஸ்வரர்களே! என் பிக்ஷா பாத்திரத்தை இங்கே கண்டீர்களா? அப்பெரியோர்கள் என்ன சொல்லுகிருர்கள்? “இல்லை. நாங்கள் பார்க்கவில்லை யென்று?” ஐயகோ! நான்கெட்டேன்; என் துறவும் வீணுனது. கபாலமில்லாமல் நான் எப்படி கபாலி ஆவேன்! ஓ! துக்கம்!

ஊறு கள்ளையு மூனையு முட்கொள
நாறு தூய்மையில் நல்லுப காரமாய்
தேறு கப்பரை போயது தீர்விலா
தேறு நண்பனி ழுந்ததை யொக்குமே.

(தரையில் புரண்டு தலையிலடித்துக் கொண்டு)

பாதகமில்லை. அது ஒரு இலச்சினையே. அதை இழந்தால் கபாலிகனென்ற பட்டத்தை நான் இழந்துவிடவில்லை.

(அவன் எழுகிருன்)

தேவ:—ஐயா! பின்ன அந்த ஓட்டை யார் எடுத்திருப்பா?

கபா:—பெண்ணே! வதக்கின இறைச்சித்துண்டமொன்று அதிலிருந்தது. ஆகையால் அவ்வோட்டை ஒரு நாயாவது அல்லது புத்த சந்நியாசியாவது எடுத்திருக்கவேண்டும்.

தேவ:—அப்பொண்ணு நாம் காஞ்சீபுரத்தைத் தெருத்தெருவா சுத்தி அதைத் தேடுவோம் வா.

கபா:—சரி, போவோம். பெண்ணே!

(இருவரும் போகிருர்கள். ஒரு புத்த சந்நியாசி கையில் திருவோட்டுடன் வருகிருன்.)

புத்த:—ஆ! வணிக குல நாயகன் தனதாசச் செட்டி செய்யும் தர்மத்தை வெல்ல மற்றெவராலும் முடியாது. இதோ! என் கையிலிருக்கும் பலவகை மீனும் இறைச்சியும் நிறைந்து பார்ப்பதற்கும், நுகர்வதற்கும், சுவைப்பதற்கும் ருசிகரமான சோறு அவன் கொடுத்ததே. நாம் இப்பொழுது நம் பள்ளிக்குப் போவோம்.

(உலாவிக்கொண்டு தனக்குள்ளே)

ஹா! நம்பெரும் கருணைக் கடலாம் இறைவன்—புத்தன், சங்கத்தை வகுத்து, அதன் அங்கத்தினராகிய சந்நியாசிகள் மாட மாளிகையில் வசிக்கலாமென்றும், பஞ்சுமெத்தையில் துஞ்சலாமென்றும் முற்பகலில் வயிருரவுண்ணலாமென்றும், பிற்பகலில்

மணங்கமழும் பானவகைகளை அருந்தலாமென்றும், பஞ்ச வாசனை நிறைந்த தாம்பூலம் தரிக்கலாமென்றும், மெத்தென்ற வுடைகளை அணியலாமென்றும் விதித்து, அவன் சிற்றின்பத்தையும் மதுபானத்தையும் மாத்திரம் ஏன் விலக்குவானேன்? இல்லை! எல்லாம் அறிந்தவனுயிற்றே; இதை மாத்திரம் எப்படி மறந்திருக்க முடியும்? நான் நினைக்கிறேன். அந்த ஊக்கம் குன்றி உடல் உலர்ந்து வஞ்சக நெஞ்சத்தராம் கிழபுத்த சந்நியாசிகள் என்னைப்போல் இளமையும் வனப்பும் வாய்ந்த சந்நியாசிகளின் மேலுள்ள பொறுமையினுல் பெண்ணையும் குடியையும் குறித்த விதிகளை நம் திரிபிடக புத்தகத்திலிருந்து அழித்திருக்க வேண்டும். இதைப்பற்றி ஐயப்பாடே இல்லை. இத்திரிபிடகத்திற்கு மூலமெங்குளதோ? அது கிடைத்தால் புத்தனின் உண்மைப் போதனையை உலகிற்குக் காட்டி என் போன்ற இளைய சந்நியாசிகளுக்கும் இன்பத்தை அளிப்பேன். (உலாவுகிறுன்)

தேவ:—பார் ஐயா! பார்! அதோ அந்த காவிவேட்டி போத்திகிட்ட பைய்யல் பார்! அவன் கைகால் முடக்கிகிட்டு கள்ளன் மாதிரி இப்படியும் அப்படியும் பாத்துகிட்டு பூனை மாதிரி பையப் பையக் காலை எடுத்து வச்சிகிட்டு போரான் பாத்தியா?

கபா:—ஆம் பெண்ணே! சரிதான். அதோடுகூட அவன் கையில் எதையோ மேலாடையால் மறைத்துச் செல்கிறுன்.

தேவ:—அப்படினு, அவனைப் பிடிச்சி அது என்னுனு பார்க்கலாம்.

கபா:—அப்படியே செய்வோம் பெண்ணே!

(முன்னுல் வந்துகொண்டே)

ஓ! சந்நியாசி! நில்!

புத்த:—யார் என்னை இம்மாதிரி விளிப்பது? யாராயிருக்கலாம் (நின்று திரும்பிப் பார்த்து) ஓ! அவன் ஏகம்பத்தில் வசிக்கும் போக்கிரி கபாலி அல்லவா? நல்லது, அவன் குடிவெறிக்கு நான் உட்படமாட்டேன். (ஓடப்பார்க்கிறுன்)

கபா:—அகப்பட்டுவிட்டது; என் கபாலம் அகப்பட்டுவிட்டது! என்னைக் கண்டவுடன் அவன் மிரண்டு ஓடுவதே அவன் திருடன் என்பதற்குப் போதியசான்று.

(முன்னுல் ஓடி வழிமறைத்து)

அடே! அயோக்கியா! இப்பொழுது எங்கே போவாய்?

புத்த:—இல்லை! நண்ப! கபாலி! நீ அப்படிப் பேசுதல் அடாது. (ஈதென்ன?) என் அழகிய நங்காய்! (தனியாக)

கபா:—ஓ! சந்நியாசி! அதென்ன காண்பி பார்ப்போம்? உன் கையில் என்ன இருக்கிறதென்று நான் அறியவேண்டும்.

புத்த:—அதில் என்ன இருக்கு பார்ப்பதற்கு? கேவலம் ஒரு திருவோடு. (தொடரும்)

சென்னை மாகாணத் தமிழர் மாநாடு, திருநெல்வேலி

வரவேற்புத்தலைவர்

உயர்திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M.A., M.L.,

உரை

தமிழ்மொழிப் பாதுகாப்பானது தமிழ் நாட்டினர்க்கேயன்றி உலகத்தார்க்கே பெருநன்மை விளைப்பதாகும். ஏனெனில், அது பழமையான நாகரிகத்தை விளக்குவதாய், பண்டைப் பெருமக்களாற் பேசப்பட்டதாய், உலகத்தில் மக்கள் முதன்முதற் றோன்றிய பேரிடப்பகுதியில் வழங்கியதாய், ஆண்டு இன்றும் பேசப்படுவதாய், என்றும் நிலவக் கூடியதாயிருத்தலின் மன்பதை வரலாற்றினை யாராய்வார்க்குத் தமிழ்மொழிப் பயிற்சி பெரிதுந் துணைபுரியவல்லது. பண்டை நாகரிகத்தின் பெரும்பயன்களாகிய பாநலம், மெய்ந்நூல்நலம், ஒழுக்கநலம், கொள்கைநலம், கலைநலம் முதலியவற்றை உலகம் உணர்ந்து மகிழ்தற்கு நமது தாய்மொழி சிறந்த கருவியாவதுமறிக.

உலகின் சிறந்த மொழிகளுள் இயற்கை யமைப்பும், எல்லா மொழிகளும் எழுதவல்ல எழுத்தமைப்பும், சொற் செட்டும், மூச்சுச் செட்டும், உயர்பொருட்செறிவும் பொருந்திய தன்மையில் இணையற்றதாயிருப்பது தமிழ்மொழியாதலும் ஒரு காரணமென்க.

உலகத்தில் மக்கள் தோன்றிய இடத்தைப் பற்றியும், தமிழர்க்குந் தமிழ் நாட்டிற்குமுள்ள தொடர்பைப் பற்றியும் பலர் பலவாறாகக் கூறினும் குமரிமுனைக்குத் தெற்கேயுள்ள கடல்கொண்ட கண்டத்தின் பகுதியாயிருந்த சாவகநாட்டில் முதல் மனிதனின் எலும்புச்சட்டம் கண்டுபிடிக்கப்பட்டதென்பதுபற்றியும் பிறகாரணங்களாலும் "எக்கேல்" என்னும் செர்மானியப்புலவர் கடல்கொண்ட கண்டமே மக்கள் முதன்முதற் றோன்றிய இடமென்று முடிவுகட்டியுள்ளார்.

மக்கள் தோன்றிய விடத்திலேயே தங்கள் கருத்துக்களை ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொள்ளுதற்குச் சில மெய்ப்பாட்டொலிகளும் ஓரசை, ஈரசைச் சொற்களும் வழங்கியிருத்தல்கூடும். அவ்வொலிகளுஞ் சொற்களும் நாளடைவில் வெவ்வேறு மக்கட்பிரிவினர் தங்கும் இடங்களுக்கும் உடலமைப்பிற்குமேற்ப, வேறுபட்டும் மாறுபட்டும் குறுகியும் பெருகியும் விரிந்து பல்வேறு பேச்சுக்களுக்கு அடிப்படையாக விருத்தல்கூடும். கடல்கொண்ட நாட்டில் ஆதியில் வழங்கிய மொழி இன்னதென்று தெரிதல் அரிதாயினும் இற்றைக்குப் பல்லாயிரமாண்டுகட்கு முன்னேயே குமரிமுனைக்குத் தெற்கேயிருந்த நாற்பத்தொன்பது சிறுநாடுகளில் தமிழ் மொழியானது வழங்கி

யிருந்த தென்பது களவியலுரையாற் புலனாகின்றது. அந்நாடு களோடு மக்கள் தோன்றிய இடமெனப்படும் பகுதி ஒன்றுபட்டிருந் தமையால் தமிழானது மக்கள் முதன்முதற்பேசிய இளம்பேச்சினின்று செவ்விய திறனுடனெழுந்த முதல் நாகரிக மொழி என்று ஊகிக்க இடமுண்டு. ஓரசைச் சொற்களாலாய சீன மொழியைச் சிலர் பண்டை முதுமொழி யென்பர். அச்சீன மொழியின் சில பகுதிகள் தமிழோடு தொடர்புற்றிருத்தலாலும் தமிழ் மொழியின் மூலங்களும் பெரும்பாலும் ஓரசைகளாகவே யிருத்தலாலும் மக்களின் மூல இடத் திற்கு அருகில் இன்றும் வழங்குவதாலும் உலகிலுள்ள பல மொழி களோடு ஒருபுடை யொற்றுமை யுடைமையாலும் ஆதிமொழியின் முதற் பிள்ளை தமிழேயென்று எண்ண இடமுண்டு. இந்திய நாடு முழுவதும் ஒரு காலத்தில் தமிழ்க்குடும்பத்தினரே பரவியிருந்து மங்கோலியர் முதலியவரோடு கலந்தனரென்று "சர் எர்பர்ட் ரிசுலி" "டாக்டர் சில்பர்ட் சிலேட்டர்" முதலிய ஆங்கிலப் புலவரும், ஆங்கலப் பேராசிரியர் பூரணலிங்கம் பிள்ளை, பி. டி. சீனிவாசய்யங்கார் முதலிய இந்தியப்புலவரும் அறுதியிட் டுரைத்தனர். "எகிப்து நாட்டில் நாகரிகம்படைத்த மக்கள் வகுப்பினர்க்குப் பண்டைநாடு பழந்தமிழ் நாடாகிய பாண்டி நாடெனவே கருதலா" மென்பதைக் கலனல் ஆல் காட் தமது ஆராய்ச்சியால் வற்புறுத்தினர். அறிவு நூலாசிரியாகிய அக்சிலி யென்பவர், எகிப்தியர்க்கும் தமிழர்க்கும் உடலமைப்பு ஒரு தன்மைத்தென மொழிந்தார். எகிப்தியரது பாம்பு வழிபாடும், பக லவன் வணக்கமும் பண்டைத் தமிழருக் குரியனவே. பண்டைத் தமிழரும் சீனமங்கோலியரும் சேர்ந்து வளர்த்த நாகரிகமே பாபிலோனியா முதலிய பெருநகர்களிற்றிகழ்ந்த சுமேரிய நாக ரிகமென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சுமேரிய வரலாற்றினை யாராய்வோர் அந்த நாகரிகம் கிழக்கிலிருந்து வந்ததாகவே கூறு கின்றனர். இப்பொழுது சிந்து மாகாணத்தில் "அரப்பா" "மோகஞ் சதாரோ" என்னு மிடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட பழம் பொருள்கள் சுமேரிய நாகரிகத்திற்கும் பழந்தமிழர் நாகரிகத் திற்கும் உள்ள தொடர்பை விளக்குகின்றன. மேலும், பாபி லோனியாவிற்கு அருகில் தோண்டி யெடுக்கப்பட்ட கற்பலகையி லுள்ள மொழிகள் தமிழ் மொழியொடு இலக்கணத்தாலும் சில சொற்சார்பாலுந் தொடர்புடையன வென்று துலங்குதல் காண்க.

ட, ண என்னும் எழுத்தொலிகள் தமிழ்ச் சொற்களில் வழங்கும் முறையிலேயே அவற்றிலும் காணப்படுகின்றன. நான்காம் வேற் றுமை யுருபும், முன்னிலை யொருமையும், அரசனைக் குறிக்கும் "கோ" என்ற சொல்லும், தமிழிலுள்ளவாறே மேற்சொன்ன கற் பலகை வாசகத்திலுங் காணப்படுகின்றன. ஆரிய மொழிக்கும் தமிழ் மொழிக்குமுள்ள ஒற்றுமையைச் சில ஆரிய அறிஞர்கள் விளக்கியுள்ளார்கள். சுமேரிய நாட்டிற்கு வடமேற்குப் பகுதியில் நடு ஆசியாவில் ஆல்டாய் மலைசார்பிலும், ருசியாவில் ஊறல் மலைச் சார்பிலும் வழங்கும் பேச்சுக்களை மொழிநூல் முறைப்படி வகுத்த ஆசிரியர்கள் அவற்றைச் சித்திய குடும்பத்தைச் சார்ந்தனவெனக் கூறு

வதோடு, தமிழையும் சித்திய குடும்பத்தின் சார்புடையதென்று செப்புகின்றனர். அது டாக்டர் கால்ட் வெல்லின் ஒப்பியல் நூலின் நன்கு காணலாம். பின்லண்டில் பேசப்படும் பேச்சில் தாயைக்குறிக்கும் "அன்யா" என்ற சொல் தமிழில் வழங்கும் அன்னை என்பதோடொத்திருக்கிறது. வடகடற்கரையில் வதியும் "சாமா எடிக்" என்பாரது பேச்சில் தாயைக்குறிக்குஞ் சொல் அம்மா என்பதே. நெருப்பைக் குறிக்குஞ் சொல் தீ யென்பதே. தந்தையைக் குறிக்குஞ் சொல் அப்பா வென்பதே. ருசியாவிலுள்ள வால்கா நதிக்கரையில் வழங்கும் பேச்சு ஒன்றில் ஆம், கோழி, தோல் என்ற சொற்கள் காணப்படுகின்றன. டாக்டர் G. U. போப்பென்பவர் மேலை ஐரோப்பாவில் வழங்கும் கெல்டிக் மொழிகளுக்கும் தமிழுக்கும் ஒற்றுமையிருப்பதைப்பற்றிப் பேசியுள்ளார். இன்னும் சில அறிஞர் ஆப்பிரிக்கா மொழிக்கும் தமிழ் மொழிக்குமுள்ள ஒற்றுமையை ஆராய்ந்துள்ளார். இவ்வொப்புமைகளால் எல்லாவற்றிற்கும் மூலமாக இருந்த ஆதிமொழியோடு தமிழ் தொடர்புடையதென்பது ஊகிக்கப்படும். ஆங்கில நாட்டிலுள்ள கேம்பிரிச்சுப் பல்கலைக் கழகத்தில் வடமொழிப் பேராசிரியராயிருந்த ராப்சன் என்னும் ஆசிரியர் கூறுவதாவது:—"ஆரிய மொழிகள் வடமேற்கு இந்தியாவிற் புகுந்தகாலை அங்கே திராவிட மொழிகள் சிறந்து விளங்கின. திராவிடத் தொடர்புகள் வேதமொழியிலும், பிற்கால வடமொழியிலும், பிராகிருத மொழிகளிலும் அவற்றினின்றும் கிளைத்த இற்றைய உள்நாட்டு மொழிகளிலும் காணப்படுகின்றன" வென்பதே. டாக்டர் சில்பர்ட் சிலேடர் என்பவர் இந்து செர்மானிய மூலமொழியானது மெசபெடோமியா, கருங்கடற்கரை என்பவற்றின் வழியாக பால்டிக் கடற்கரையிலிருந்த வாணிப நெறியிற் சிறப்பாக வழங்கியமொழி யென்றும், அது பல நாடுகளில் பரவியிருப்பது தற்காலத்தில் ஆங்கில மொழியானது ஆங்கிலக் கப்பல்கள் போய்ச் சேரும் துறைமுகங்களிலிருந்து உள் நாட்டில் பல இடங்களுக்குப் பரவினதுபோலுமென்றும் இயம்பினர். மேலும், தற்காலத்தில் தமிழைப் பார்க்கிலும் ஆங்கிலத்தைத் தமிழ்ப் பிராமணர் நன்கு கையாளுவது போலப் பஞ்சாப் நாட்டில் ஆரியர் மிகுந்தகாலை திராவிடப் பிராமணர் வடமொழியை நன்கு கற்று வேதத்தைப் பாதுகாப்பதிலும் பரவச் செய்வதிலுஞ் சிறந்தவராயினரெனவும், அக்காரணத்தினல் மொழியளவில் திராவிடர்கள் ஆரியத் தொடர்புற்றன ரெனவும், ஆரியர்கள் திராவிட நாகரிகம் மேற்கொண்டன ரெனவும் அவர் ஆய்ந்துரைத்தனர். இக்கருத்துக்களை ஆயுமிடத்து ஒரு காலத்தில் இந்தியநாடு முழுவதும் திராவிடமொழிகள் பரவியிருந்தனவென்பதும், அவற்றில் ஆரியக்கலப்பு மிகுதியாவதற்குக் காரணராயினோர் தமிழ் மக்களே யென்பதுந் தெளிவாகும்.

தமிழின் சிறப்பைப்பற்றி டாக்டர் சில்பர்ட் சிலேட்டர் என்பவர் மிகவும் அழகாக "இந்திய நாகரிகத்தில் திராவிடப் பகுதி" யென்ற தமது நூலில் உரைத்தமை போற்றத்தக்கது. அவர் கருத்துக்களாவன:—"தமிழ் இந்தியாவிலுள்ள எல்லாமொழியிலுஞ் சிறந்த நாகரிகமுடையது. அமைப்பு நுட்பத்

திலும்அளவை யுணர்ச்சியிலும் மிக மேம்பட்டது. ஒழுங்கும் நுட்பமுமுள்ள உயர்ந்த தத்துவக் கருத்துக்களையுடைய இந்திய நாகரிகமானது அதை யுண்டாக்கி வளர்க்கக்கூடிய மக்கள் பால் தோன்றியிருத்தல் வேண்டும். அத்தகைய ஆற்றல் அம் மக்கள் பேசும் மொழியாக்கத்திலுங் காணப்படும். தூய திராவிடமொழியானது அவ்வாற்றலை மற்ற எந்த இந்தியமொழி யிலும் அதிகமாகக் காட்டுகின்றது. திராவிடமொழிகளெல்லாவற்றிலுந் தமிழே கருத்து நுட்பத்தைத் திட்பமாகக் காட்டக்கூடிய கருவியாகும். மேலைநாட்டிற்கும் இந்த நாட்டிற்கும் நடத்தற்குரிய அறிவுவணிகத்தில் சிறந்த வணிகராவார் ஆங்கிலமும் தமிழும் கற்றவர்களே'' என்றது காண்க. ஆங்கில அறிஞர்கள் தமிழின் பெருமையை உணர்ந்திருக்கு மளவு தமிழ்மக்கள் கூடத் தெரிந்திருப்பதாகத் தோன்றவில்லை. டாக்டர் வின்சிலோ என்பவர் தமிழுக்குப் பெரிய அகராதி வகுத்தவர். அவர் கூறு வதாவது:—''தமிழ் ஒரு கீழான மொழியன்று. ஆங்கிலத்தின் அடிப்படை யான பேச்சிற்கு எழுத்து ஏற்படுமுன்னரே தமிழானது உயர்ந்தநயமுடைய மொழியாய் விளங்கிற்று. செய்யுள் நடையில் தமிழானது கிரீக்மொழி யைப் பார்க்கிலும் மென்மையும் திட்பமும் உடையது. செய்யுள் வழக் கிலும் உரைநடையிலும் கடன் கொண்ட பகுதியையும் சேர்த்து நோக்கின் தமிழானது லத்தீன் மொழியிலும் வளமுடையது. அதன் முழு ஆற்றலை நோக்குமிடத்து ஆங்கிலத்தையும் செர்மன் மொழியையும் ஒத் திருக்கிறது'' என்பதே. பேர்சீவல் என்னும் பாதிரியார் கூறுவதாவது:— ''ஒரு மொழியும் தமிழைப்போலச் சுருக்கமும் ஆற்றலும் ஒருங்கு சேரப் பெறவில்லை யென்று தோன்றுகிறது. பிற எப்பேச்சும் மக்கள் மனக் கருத்தை விளக்குவதில் அத்துணை அறிவு நுட்பமுஞ் செறிவும் உடைய தன்று'' என்பதே. டாக்டர் கால்ட்வெல் ''தனித்தியங்கும் ஆற்றலில் தமிழ் மொழியே பிறதிராவிடமொழிகள் யாவற்றிலும் மிகச்சிறந்தது. தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியன வடமொழியினின்று கடன் வாங்கப் பழகி மிகுதியாகக் கடன் வாங்கிவிட்டபடியால் கடன் தீர்க்கமுடியாத நிலையிலிருக்கின்றன. தமிழ் கடன் வாங்கியிருந்தாலும் அதனைத் தீர்த்து விட்டுத் தனித்து நன்கு வாழும் திறமையுடையது'' என்றார்.

இனி, தமிழ் என்ற சொல்லின் இயல்பை ஆராய்வாம். ''தமிழக்கிளை வியும் அதனோரற்றே'' என்ற தொல்காப்பியச்சூத்திரத்தால் தமிழென்பது தமிழ்ச்சொல்லேயாதல் தெளிவு. அதற்கு இனிமை யென்ற பொருள் இருத்தல் தெளிவு. ''தமிழ்மண்டில'' மென்ற சொற்றொடர் திருமந்திரத் திலே தூயமண்டிலமென்ற பொருளில் வழங்குவதால் தமிழ் தூய்மை யையு முணர்த்துமென்று தெரிகிறது. ''தமிழ்தழீஇய சாயலவர்'' என்ற விடத்துத் தமிழ் அழகையும் குறிப்பாலுணர்த்துகிறது. தூயதன்மையைக் குறித்தலால் அறத்தையும், இனிமையாகிய பயன் தருவதால் பொருளையும், அழகைக் குறிப்பதால் இன்பத்தையும் அது சுட்டும் என்பாருமுளர். இன் னும் அச்சொல்லைப் பலபடப்பிரித்துக் குறிப்புப்பொருள் கூறுதலுமுண்டு. இன்பமென்பது பேரின்பத்தையும் அடக்கி நிற்றலால் அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கினையும் தமிழுணர்த்துமென்றலு மொன்று. ''தமி'' என்ற அடியானது தனி யெனப் பொருள் படுமெனக்கொண்டு தமிழென்பது ஒப்புயர்வற்ற மொழி யென்று கூறுவாரு முளர். அது

பழமையான மொழிகளுட் பழமையதாய், இன்று நிலவும் மொழிகளுட் சிறப்பாய் விளங்கும் தனிநயம் அதற்கே உரியது என்ப. தமிழு என்பது தமிழ் என ஆயிற்று என்பார். அச்சொல்லைப் பிரித்து அகரம், இகரம், உகரம் என்ற மூன்று உயிரெழுத்தும் தகரம் மகரம் ழகரம் என்ற வல்லின மெல்லின இடையின எழுத்தும், இருத்தலோடு இறுதியில் நின்ற ழகரம் இடையினச் சிறப்பெழுத்தாகவு மிருத்தல் பாராட்டற் பாலதென்பர். அச்சொல்லில் அகர உகர மகர மிருத்தலால் ஓங்காரத்தின் பகுதிகள் அதிலிருத்தலாகக் கூறுதலுமுண்டு. தமிழ் என்பதில் அகரம் இயற்றமிழையும், இகரம் இசைத்தமிழையும், உகரம் நாடகத்தமிழையுங் குறிக்கு மென்பார். மனத்தின் கருத்தை இயற்றமிழும், சொல்லின் இனிமையைஇசைத்தமிழும், செயலின் நயத்தை நாடகத் தமிழுமுணர்த்தும். தமிழ் என்ற சொல் மொழியின் இயற்கை நயத்தைக் குறிக்கும். சம்ஸ்கிருதம் என்ற சொல் மொழியின் செயற்கை நயத்தைச்குறிக்கும். ஓடி வளைந்தது என்று பொருள்பட்டுத் தமிழ்நாட்டின் இடத்தைக் குறிக்குந் திராவிடமென்ற சொல் வடமொழியில் வழங்குவதற்கு முன்னேயே இனிமைப் பண்புணர்த்தும் தமிழென்ற சொல் வழக்கிலிருந்தது என்பது காலஞ்சென்ற திரு. தமோதரம் பிள்ளையால், அவர்கள் பதிப்புரையொன்றில் நிலைநாட்டப் பட்டிருக்கிறது. அதனால் தமிழ்ச்சொல் திராவிடமென்பதின் சிதைவென்பார் கொள்கை தவறென்றுணர்க.

தமிழ் நாட்டிற் காணப்படும் தொன்மையான புதையற் பொருள்கள் எகிப்து முதலிய ஆப்ரிக்கா நாடுகளிலும் அசீரியா முதலிய மேலை ஆசியா நாடுகளிலும் கிரீசுக்குத் தெற்கேயிருந்த தீவுகளிலுங் காணப்படும் புதையற்பொருள்களோடு ஒத்திருத்தலாலும், அவற்றைக் குறிக்குஞ் சொல் தமிழாகத் தமிழ் நாட்டில் காணப்படுதலாலும், அப்பொருள்கள் குறிக்கும் நாகரிகம் ஆரிய நாகரிகத்திலும் மிகப்பழமையானதாதலாலும் ஆரியம் இந்நாட்டில் வழங்குவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்னேயே தமிழ் சிறப்புடன் பெருவழக்காய் திகழ்ந்ததென்பது கருதப்படும். புரூஸ் புட் (Bruce Foote) என்பவர் இந்திய நாட்டில் ஆய்ந்தெடுத்த பத்து வகையான பழங்கற்கருவிகளுள் வேல் வடிவமுடைய கற்கருவியே சிறந்ததெனக் குறித்தனர். ராப்சன் 'ஆசிரியர் தென்னாட்டிற் காணப்படும், கல்லாயுதங்கள் கடைசியாய்ப் பயன்பட்ட காலத்திற்கும் வேதம் தோன்றிய காலத்திற்குமிடையே கணக்கில்லாத நூற்றாண்டுகள் கழிந்திருக்க வேண்டு மென்கின்றார்.

Professor Rapson says "The rough-chipped implements are found in large numbers in the southern half of the peninsula & in deposits which indicate that countless centuries must have elapsed between their last appearance and the dawn of Vedic History".

இதனாலும் தமிழின் தொன்மை நன்குபுலனாகும். குமரிமுனைக்குத் தெற்கிலிருந்த நிலத்தைக் கடல் கொள்வதற்குமுன் முதல் தமிழ்ச் சங்கமிருந்ததென்பது களவியல் உரையில் அறியப்படும். அக்காலத்தில் தமிழுக்கும் ஆரியத்திற்கும் தொடர்பு ஏற்பட்டதாகத் தெரியவில்லை

கடல் கோள் நிகழ்ந்த பின்னரே தொல்காப்பியம் எழுதப்பட்டது. தொல்காப்பியர் காலத்தில் தமிழ்வழங்கும் நிலங்கள் செந்தமிழ் நிலமும் அதனைச் சார்ந்த பன்னிரண்டு நிலங்களுமாக இருந்தன. செந்தமிழ் நிலத்திற்கும் மற்றைப் பன்னிரு நிலங்களுக்கும் பொதுவான தமிழ்ச்சொல் இயற்சொல்லெனப்பட்டன. பன்னிரண்டு நிலங்களுள் ஒவ்வொரு நிலத்திற்கு மாத்திரம் உரிய சொல் திசைச் சொல்லெனப்பட்டது. அக்காலத்தில் வடசொல்லின் தொடர்பும் ஏற்பட்டபடியால் அதனைத் தமிழிற் சேர்த்தற்குரிய விதியையும் ஆசிரியர் தொல்காப்பியனுர் வகுத்தனர். வடசொற்களில் வடமொழிக்கு மாத்திரம் உரிய எழுத்துக்களை நீக்கி இரண்டுக்கும் பொதுவான எழுத்துக்களாலான சொற்கள் தமிழில் வழங்குவதே பொருத்தம் என்றுர் ஆசிரியர். அதற்கு உதாரணம் விஷயம் என்பதை விடயம் என்றும், ஹரி என்பதை அரியென்றும் வழங்குவதாமென்க. வடசொல்லாயிருந்தாலும் பொதுவெழுத்தாலான சொல் ஆகுமென்பதும் ஒருகருத்தாகும். கமலம் என்பது அதற்கு உதாரணம். வடசொல்லில் சில எழுத்துக்களை நீக்கியும் சொற்கள் தமிழிற் பயில இடமுண்டு. கிருஷ்ணன் என்பதைக் கிருட்டினன் என்று கூருது கண்ணன் என்று கூறுவதே அதற்கு உதாரணம். 'சிதைந்தன வரினு மியைந்தன வரையார்" என்பது கட்டளை. இன்ன வடவெழுத்திற்கு இன்ன தமிழ் எழுத்து எழுதப்படவேண்டுமென ஆசிரியர் தொல்காப்பியனுர் விதிக்கவில்லை. அவ்விதி பிற்காலத்து எழுந்ததாகும். ஆதியில் வடசொற்கள் மிகுதியாகப் பயிலாமையின் அவ்விதி வேண்டப்படாமலிருந்தது.

நன்னுலார் காலத்தில் தமிழ்நிலம் இல்லாத பிறநிலத்து மொழிகளும் திசைச் சொல் எனப்பட்டன. அவற்றைப் பதவியல் 20, 21, 22 சூத்திரங்களிற் காண்க. தமிழில் வழங்கும் எழுத்துக்களைக் கொண்டே எந்த வடசொல்லும் எழுதப்படவேண்டும் என்பதே நன்னுலார் கருத்து. சில இடங்களில் நெட்டெழுத்துக்கள் குற்றெழுத்தாகவும் திரிந்துவரும் என்று கூறியுள்ளார். இவ்விதிகளால் தமிழின் இயற்கை ஒலித்தன்மைகள் மாருமலும் சொல்லின் முதலில் வரவேண்டிய எழுத்து விதிகள் முரண்படாமலும் வடசொற்களும் பிற சொற்களும் தமிழில் வழங்குவனவாயின. இதனுல் தமிழ்மொழியின் இயலமைப்புப் பாதுகாக்கப்பட்டது.

பிற எழுத்தோசைகளை மாற்றமில்லாமல் தமிழில் வழங்கவேண்டும் என்னும் கொள்கைபற்றி இக்காலத்துச் சிலர் தமிழிற் புதிதாக எழுத்துக்களைச் சேர்க்கவேண்டுமென்று கூறுகின்றனர். அங்ஙனம் சேர்த்தலால் மொழியின் இயலமைப்பு மாறுபட்டு நயம் குன்றி ஒரு மொழி இரு பிரிவாகப் பிளவுபட்டு முன்னூலுக்கும் பின்னூலுக்கும் வேற்றுமை யேற்பட்டு மொழி கற்பார்க்கு இடர்ப்பாடும் முன்னூற் புறக்கணிப்பும் விளையும். மேலும் தமிழில் இப்போதுள்ள எழுத்துக்களைக்கொண்டே பிற மொழிச் சொற்களை எழுதக்கூடுமெனக் காலஞ் சென்ற திரு. **பா. வே. மாணிக்க நாயக்கர்** விளக்கியிருத்தலின் தமிழுக்குப் புதிதாக எழுத்துக்களைச் சேர்த்தல் மிகையாகும்; இப்போது இருக்கின்ற எழுத்துக்களிற் சிலவற்றை எடுத்துவிடுதலும், அவ்வாறே மொழிப் பயிற்சிக்கு இடையூருகும். ஆதலால், இப்போதுள்ள தமிழ் எழுத்துக்களைக் குறையாமலும், கூட்டாமலும் பாதுகாப்பதே நமது கடமையாகும்.

கடற்பெருக்கு நிகழ்ந்த பண்டைக்காலத்தே தோன்றிய தொல் காப்பிய இலக்கணத்திலேயே பேச்சு ஒலியின் மூல நூல் (Chemistry of articulate sounds) முறைக்கேற்றவாறு எழுத்தின் வரம்பு கட்டப்பட்டிருக்கின்றது. வாயின் உறுப்புக்கள் ஒன்றை யொன்று தொடாமல் இயங்குவதால் எழும் ஒலிகள் உயிர் ஒலிகள் எனப்படும். ஒன்றை யொன்று தொடுவதால் ஏற்படும் ஒலிகள் மெய் யொலிகளெனப் படும். வாயைத்திறப்பதனாலும், நாவினை உயர்த்துவதனாலும் இதழ்களைக் குவிப்பதனாலும் எழும் உயிர் ஒலிகள் அ, இ, உ எனப்படும். அகரத்தின் கூறும், இகரத்தின் கூறும் சேருங்கால எகாரமும், அகாரமும் இகாரமும் தெளிவாய்க் கலப்பதனாலே ஐகாரமும், அகரக்கூறும் உகரக்கூறும் கலப்பதனாலே ஒகாரமும், அகாரமும், உகாரமும் தெளிவாய்க் கலப்ப தனாலே ஒளகாரமும் உண்டாவன. நாக்கு நன்றாக மேல் எழாமலே ஒலிக்கக்கூடிய குற்றியலிகாரமும், இதழை நன்றாகக் குவியாமலே ஒலிக்கக்கூடிய குற்றியலுகாரமும் எழுத்துக்களின் சார்பாய் ஒலித்தல் அன்றித் தனியே நன்கு ஒலியாமையால் அவை எழுத்தெனப்படாவென ஆசிரியர் தொல்காப்பியனார் விதந்தோதினர். அவ்வாறே எழுத்தொலி களோடு சேர்ந்தே ஒலிக்கும் ஆய்தமாகிய மூச்சொலியையும் எழுத்தாகா தென ஆசிரியர் கூறினர். ஆகவே உயிரெழுத்து என்று சொல்லத் தகுவனவாகிய அகர, இகர, உகர, எகர, ஒகாரங்களும் அவற்றின் நீட்சி யும் ஐகாரமும் ஒளகாரமும் மூலமாகிய உயிர் எழுத்தொலிகளாகும்.

அவ்வாறே மெய்யெழுத்தின் மூல ஒலிகள் பதினெட்டுமே சிறப் பான மெய்யெழுத்துக்களென ஆசிரியரால் கருதப் பட்டன. உயிர் மூலங்கள் பன்னிரண்டெனவும், சார்பெழுத்துக்கள் (ஆய்தம், குற்றிய லிகரம், குற்றியலுகரம்) மூன்றெனவும் வகுத்து, அவற்றினின்றே பிற பேச்சொலிகள் எழுவனவென ஆசிரியர் குறிப்பால் உணர்த்தினமை யாலும், அவற்றிற்கு வரிவடிவங்கள் வகுத்திருப்பதாலும், அவற்றின் துணைகொண்டே பேச்சொலிகள் எல்லாவற்றையும் எழுதுதல் கூடுமாத லின் வேறு எழுத்துக்களைப் பிற மொழியினின்று சேர்ப்பதற்குக் காரண மில்லை. f' என்ற ஒலியை ஆய்தம் உடன் ஒலிக்கும் வகரத்தாற் குறிக்க லாம் (ஃவ); என்பதை ஆய்தம் உடன் ஒலிக்கும் பகரத்தாலும், 'ph' என் பதை ஆய்தம் உடன் ஒலிக்கும் பகரத்தாலும், 'ph' என்பதை ஆய்தம் பின்னொலிக்கும் பகரத்தாலும் குறிக்கலாம். 'man' என்பதிலுள்ள 'a' என்பதன் ஒலியைக் குற்றியலிகரங் கலந்த அகரத்தால் குறிக்கலாம். இவ் வோசைகள் தமிழ் மொழிக்கு வேண்டாமென்று விடுத்ததற்குக் காரணம் ஒலிச்செட்டும் இயற்கை யமைப்புமாமென்க.

(தொடரும்)

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

இந்தியப் பெரியாரான காந்தியடிகளாரின் மீது பூனுவில் வெடிகுண்டெறிந்து அவருக்கு ஊறு செய்யக் கருதியது தமிழல்லாச் செய்கையாகும். அஃது அழுத்தமாகக் கண்டிக்கற்பாற்று.

* * *

சென்ற ஜூன் திங்கள் 10, 11-ம் நாட்களில், சென்னை மாகாணத் தமிழர் மாநாடு திருநெல்வேலியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சென்னை அரசாங்க வளர்நெறி யமைச்சர் திரு. தி. பொ. இராஜனவர்கள் அக்காலை நிகழ்த்திய திறப்புரை அவருக்கு தமிழ்மொழியின்பாலுள்ள பற்றுதலையும் அதன் வளர்ச்சியில் அவர் கொண்டுள்ள ஆர்வத்தையும் நன்கு தெரிக்கும். வரவேற்புத் தலைவர் திரு. கா. சுப்பிரமணியபிள்ளையவர்களின் வரவேற்புரையின் ஒரு பகுதி பிறிதோரிடத்தில் வெளியிடப் பட்டிருக்கிறது. ஏனைய பகுதியும் மாநாட்டுத் தலைவர் திரு. த. வெ. உமாமகேசுரம் பிள்ளை யவர்களுரையும் புலவர் மாநாட்டு வரவேற்புத் தலைவர் திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, தலைவர் உயர்திரு மறைமலையடிகளார் ஆகியோரின் உரைகளும் செல்வியில் தொடர்ந்து வெளியிடப்படும். மாநாட்டில் நிறைவேறிய பல தீர்மானங்களில் பண்டிதர்கட்குப் பள்ளிச்சாலைகளில் உரிய நிலை யளிக்க வற்புறுத்தியதும், தமிழ் மொழியின் எழுத்துகளைக் கூட்டியுங் குறைத்தும் மனம்போற் சிதைக்கச் சூழ்ச்சி செய்த அறிவிலார் செய்கையைக் கண்டித்ததும், தமிழ்மொழியாக்கங் கருதிக் கலைநுட்பம் தெரிக்குஞ் சொற்களை யமைக்கும் முறையை வரையறுத்ததும் எடுத்து மொழியத்தக்கனவாம். மாநாட்டின் சார்பாக நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கம் நந்தா ஊக்கத்துடன் முந்துற்றுப் பணியாற்றும் என நம்புகிறோம்.

* * *

திருப்பனந்தாள் மடத்தலைவர் காசிவாசி சுவாமி நாத தேசிகரவர்கள் கல்வி வளர்ச்சிக்காக ஆண்டு தோறும் பெரும் பொருட் கொடை வழங்கி வருதல் தமிழ் நாட்டார் அறிந்ததே. பெருஞ்சிறப்பான இச்செயலுடன் அண்மையில் தஞ்சை நகர ஏழைமக்கள் விடுதிக்கென ஆயிரம் வெண்பொன் நன் கொடையளிக்க அவர் மனம் இசைந்திருப்பது "ஈரமுடைமை யீகையினறிப" என்ற மூதுரைக்கு எடுத்துக்காட்டாகும்.

* * *

விதிவிளக்கம் என்ற பெயருடன் அழகிய சிறுநூலொன்றைத் திருமிட்டா முனிசாமி செட்டி, B. A., என்பவர் எழுதிவெளியிட்டுள்ளார்கள். இஃது ஒரு சிறந்த சோதிட நூல். இதுகாறுஞ் சிக்கலானதெனக் கருதப்பட்டிருந்த பல சோதிட உண்மைகளை இதன்கண் நூலாசிரியர் ஆராய்ச்சிவன்மையினாலும் பழக்கத்தினாலும் கண்டு அறுதியிட்டுத் தெரித்துள்ளார். இதன் விலை ரூ. 1. வேண்டுவோர் மண்ணடி, புதுத் தெரு 41-ம் எண்ணிலுள்ள ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.



ஔவையார்